KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 09 October 2026 இதழ்:- 29

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# அமெரிக்கா படையெடுத்தால் எதிர் கொள்ள கனடா எவ்வாறு தயாராகிறது?

அமெரிக்கப் படையெடுப்பு போன்ற கற்பனை செய்து பார்க்கவே கடினமான ஒரு சூழலுக்கும் தான் தயாராக இருப்பதாக கனடா பிரதமர் மார்க் கார்னி கடந்த வாரம் தெரிவித்தார். டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபராக இருக்கும் நிலையில், அமெரிக்கா கனடா இடையிலான உறவு மறுவரையறை செய்யப்பட்டு வருவதால் அனைத்து சாத்தியக்கூறுகளையும் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பு தனக்கு இருப்பதாக 'நியூயார்க் டைம்ஸ்' நாளிதழிடம் அவர் கூறினார். அதேவேளை, அமெரிக்கா கனடா மீது படையெடுப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்றும் அத்தகைய சூழல் ஏற்படுவது அசாத்தியமானது என்றும் அவர் குறிப்பிட்டார். இது வெறும் ஆபத்து (14ம் பக்கம் பார்க்க)



# மனைவி ஷிராந்தி கைது! கதறி அழுதபடி ஊழல் ஒழிப்பு அலுவலகத்திற்கு ஓடிய மகிந்தா!



வினை விதைத்தவன்வினை அறுப்பான்! அறம் பிழைத்தோரிற்கு அறமே கூற்றாகும்! சும்மாவா எம் முன்னோர் சொன்னார்கள்! எத்தனை தமிழரைக் கொன்று குவித்தார்கள் மகிந்த சகோதரர்கள்! அத்தனை கண்ணீரும் வீணாகிப் போகுமோ? இன்னும் இன்னும் செந் நீரும் கண்ணீருமாக அப்பாவித் தமிழர்கள் இட்ட சாபம் முட்டாமல் போகுமோ?

07 ஒக்டோபர் 2026 காலை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியும், இலங்கையின் முன்னாள் முதல் பெண்மணியுமான ஷிராந்தி ராஜபக்ஷ, இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் அதிரயாகக் கைது செய்யப்பட்டார்! (4ம்பக்கம்)

## ஞானசாரருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உறுதிப்படுத்திய மேல்நீதிமன்றம்



# 3 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் சிறை ஆடையுடனேயே நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும்!



சிறைச்சாலை விதிமுறைகளின்படி, 3 ஆண்டுகளுக்கும் அதிகமான சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் சிறைச்சாலையினால் வழங்கப்படும் சிறை ஆடையை அணிந்தே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான சேனக்க பள்ளேதன்ன தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் அடைக்கப்படும் கைதிகளின் சீருடைகள் தொடர்பாகச் சமூக ஊடகங்களில் பரவிவரும் பல்வேறு கருத்துக்களுக்குத் தெளிவுபடுத்தல் வழங்கி அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலதிகமாக விளக்கமளித்த அவர், பௌத்த பிக்கு ஒருவருக்கு நீதிமன்றத்தினால் சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், அந்த் தண்டனைக் காலத்தைச் சிறைச்சாலையில் கழிக்கும் போது அவர் தமது காவி ஆடையை அணிய முடியும் எனத் தெரிவித்தார்.

எனினும் விதிக்கப்பட்டது கடுழியச் சிறைத்தண்டனை என்றால் எந்தவொரு நபரும் சிறை ஆடையையே அணிய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தண்டனை பெற்ற ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் போது, அவரது சிறைத்தண்டனைக் காலம் 3 ஆண்டுகளை விடக் குறைவானதாக இருந்தால், அவர் தண்டனைக்கு முன்னர் அணிந்திருந்த சாதாரண ஆடையை அணிவதற்குச் சிறைச்சாலை அத்தியட்சகர் அனுமதி வழங்க முடியும்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் பௌத்த பிக்குகளுக்கும் காவி ஆடை அணிய அனுமதி வழங்கப்படலாம். ஆனால், 3 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட எந்தவொரு தராதரத்தைக் கொண்ட நபராக இருப்பினும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் போது சிறைச்சாலையினால் வழங்கப்படும் ஆடையை அணிந்தே ஆஜர்படுத்தப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும், நாட்டின் சிறைச்சாலைகளில் 63க்கும் மேற்பட்ட தேரர்கள் சிறைத் தண்டனை அனுபவித்து வருவதாகவும், அவர்கள் அனைவரும் சிறைச்சாலையினுள் சிறை ஆடையையே அணிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக கலகொட அத்தே ஞானசார தேரரை சிறை உடையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியமைக்கு தங்களது கவலையைத் தெரிவித்து, மூன்று நிக்காயக்களின் மகாநாயக்க தேரர்கள் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

அக்கடிதத்தில் ஒரு துறவியின் துறவற ஆடையை அகற்றும் அதிகாரம் சங்க சபைக்கு மட்டுமே உரித்தானது என்பதால் இவ்வாறு செய்வது பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டுள்ள தேரர்கள், குற்றஞ் சாட்டப்பட்டுள்ள துறவியை அவரது காவி ஆடையுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது..

## அரசன் அன்று கொல்வான்! ஆண்டவன் நின்று கொல்வான்!



அன்று ராஜபக்சக்கள் அதிகாரத்தில் இருக்கும் போது அநீதியாக ஜெனரல் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து அரசியல் பழிவாங்கல்கள் செய்தனர்.

சுமார் இரண்டரை வருடங்கள் தன் கணவரது விடுதலைக்காக நீதிமன்றம் ஏறிரங்கி இந்த அம்மா விட்ட கண்ணீரை ஊடகங்கள் மூலம் நாம் பார்த்து கவலையடைந்த விடயம் . அனோமா பொன்சேகா அன்று விட்ட கண்ணீரை பெண் என்ற அடிப்படையில் ஷிரந்தி ஆனந்தக் கண்ணீர் தான் வடித்திருப்பார்.அதிகார மமதையில் யாரும் அளவுக்கு அதிகமாக ஆடி விடக் கூடாது என்பதற்கு ராஜபக்சக்கள் ஓர் உதாரணம்.

மனைவியை கைது செய்தவுடன் பின்னாடியே ஓடிச் சென்றாராம் மகிந்த. எத்தனை தமிழ் தாய்மார்கள் நள்ளிரவில் தங்கள் பிள்ளைகளைக் கைது செய்யும் அழுது இருப்பார்கள்? அரசன் அன்று கொல்வான்! ஆண்டவன் நின்று கொல்வான்.!


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# அனோஜனுக்கு சவுதியிடம் மன்னிப்புக் கோரும் ஜனாதிபதி ஞானசார தேரருக்கு ஏன் மன்னிப்பு வழங்கக்கூடாது? - நாமல்

சிறைக்காவலிலிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நமல் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில், 'பொது பல சேனா' அமைப்பின் பொதுச் செயலாளர் வணக்கத்திற்குரிய கலகொட அத்தே ஞானசார தேரர் நடத்தப்பட்ட விதம் குறித்து அரசாங்கத்தைக் கடுமை யாக விமர்சித்தார். அத்துடன், அவரு க்கு பொதுமன்னிப்பு வழங்குவது குறித்து ஜனாதிபதி அனுர குமார திஸா நாயக்க பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சவுதி அரேபியாவில் மரண தண்ட னையை எதிர் கொள்ளும் இலங்கை நாட்டவரான சிவராசா அனோஜனுக்காக அந்த நாட்டு அரசாங்கத்திடம் மன்னிப்பு கோரும் அதே வேளையில், ஞானசார தேரரின் விவகாரத்தில் ஏன் அத்தகைய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வில்லை என்று ராஜபக்ச கேள்வி எழுப் பினார். மற்றொரு நாட்டின் தலைவரிடம் மன்னிப்பு கோரக்கூடிய நிலையில் நமது ஜனாதிபதி இருக்கும் போது இங்கேயும் தனது நடவடிக்கைகளின் மூலம் அவர் ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நாமல் கூறினார்.

ஞானசார தேரர் சிறை உடை அணி விக்கப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிறு த்தப்பட்ட விதத்தையும் நாமல் விமர்சி த்தார் அந்தத் தேரர் நடத்தப்பட்ட விதம் குறித்து மூத்த பௌத்த மதகுருமார்கள் எழுப்பிய கவலைகளை அரசாங்கம் புறக்கணித்துவிட்டதாக அவர் குறிப் பிட்டார். மகா சங்கத்தினரை அரசாங்கம் அவமதிப்பதாகக் குற்றம் சாட்டிய நாமல்



பௌத்தம் மற்றும் பௌத்த மரபுகள் குறித்த கவலைகளை வெளிப்படுத்து வதை இனவாதமாகச் சித்தரிப்பதற்கு எதிராகவும் எச்சரித்தார்.

# ஞானசாரருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உறுதிப்படுத்திய மேல்நீதிமன்றம்

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கொழும்பு நீதிவான் நீதி மன்றம் விதித்த ஒன்பது மாத சிறைத் தண்டனையை கொழும்பு மேல் நீதி மன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே பிளவை அல்லது முரண் பாட்டைத் தூண்டும் வகையில் ஊடகச் சந்திப்பொன்றில் ஞானசார தேரர் வெளி யிட்ட கருத்துகள் தொடர்பான வழக்கு இதுவாகும்.

நீதிவான் நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்து செய்யக் கோரி ஞானசார தேரர் தாக்கல் செய்திருந்த மேன்முறை யீட்டை மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதற்கான தீர்ப்பு இன்று கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலை யில் வாசிக்கப்பட்டது.



குற்றச் சாட்டில் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஞானசார தேரருக்கு 2025 ஜனவரி 9 அன்று நீதிவான் நீதிமன்றம் ஒன்பது மாத சாதாரண சிறைத்தண்டனையும் 1,500 ரூபாய் அபராதமும் விதித்தது. தற்போது வேறொரு சிறைத்தண்ட னையை அனுபவித்து வரும் ஞானசார தேரர் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகச் சிறை ச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் நீதி மன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள் ளதாகவும், அந்த விவகாரம் 2027 பெப்ரவரி 23 அன்று பரிசீலனைக்கு எடு த்துக்கொள்ளப் படவுள்ளதாகவும் அவ ரது சட்டத்தரணி நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து நீதிவான் நீதிமன்றத்திலான வழக்கு விசாரணை 2027 பெப்ரவரி 25 திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதுடன், அன்றைய தினம் ஞானசாரதேரரை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# மனைவி ஷிராந்தி கைது! கதறி அழுதபடி ஊழல் ஒழிப்பு அலுவலகத்திற்கு ஓடிய மகிந்தா!





வினை விதைத்தவன்வினை அறுப்பான்! அறம் பிழைத்தோரிற்கு அறமே கூற்றாகும்! சும்மாவா எம் முன்னோர் சொன்னார்கள்! எத்தனை தமிழரைக் கொன்று குவித்தார்கள் மகிந்த சகோதரர்கள்!

அத்தனை கண்ணீரும் வீணாகிப் போகுமோ? இன்னும் இன்னும் செந்நீரும் கண்ணீருமாக அப்பாவித் தமிழர்கள் இட்ட சாபம் முட்டாமல் போகுமோ?

07 ஒக்டோபர் 2026 காலை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியும், இலங்கையின் முன்னாள் முதல் பெண்மணியுமான ஷிராந்தி ராஜபக்ஷ, இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டார்!

நோயுற்று நடக்க முடியாமல் இழுபடும் (இனப்படுகொலையாளி) மகிந்தவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவின் கைது இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது!

அன்று காலை கிருலப்பனையில் உள்ள ஷிராந்தி ராஜபக்ஷவின் இல்லத்திற்குச் சென்ற இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள், சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக அவரிடம் துருவித் துருவி கேள்விகள் கேட்கப்பட்டு, வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்குப் பின்பு, அவர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஷிராந்தி ராஜபக்ஷவின் இந்தத் திடீர் கைதுக்கு முக்கியக் காரணம், 'சிரிலிய சவிய' (Siriliya Saviya) தொண்டு நிறுவனத்தின் கணக்கு வழக்குகளில் நடந்துள்ளதாகக் கூறப்படும் நிதி முறைகேடுகள் தான் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் நிதிக் கையாளுதலில் பெருமளவு ஊழல் நடந்துள்ளதாக எழுந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே, ஆணைக்குழு இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கிருலப்பனை இல்லத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட ஷிராந்தி ராஜபக்ஷ, மேலதிக விசாரணைகளுக்காகக் கொழும்பில் உள்ள இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு அழைத்து செல்லப்பட்டார். முன்னாள் முதல் பெண்மணி ஒருவர் ஊழல் குற்றச்சாட்டுகளுக்காகக் கைது செய்யப்பட்டிருக்கும் இந்தச் சம்பவம், இலங்கை அரசியல் வட்டாரத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மனைவி கைது செய்யப்பட்டு வாகனத்தில் கொண்டு செல்லப்படுவதைக் கண்டு கதறி அழுத மகிந்தா ராஜபக்ஸ தானும் வாகனத்தில் பின்தொடர்ந்து ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அலுவலகத்திற்குச் சென்றும் ஒன்றும் நடக்கவில்லை.

இதேவேளை மகன் நாமல் ராஜபக்ஸவும் சிறைச்சாலையிலேயே இருந்து வருகின்றார். மகிந்தா ஜனாதிபதியாக இருந்த போது 8 இடங்களில் மாளிகைகளைக் கட்டினார். ஆனால் இன்று அவரது குடும்பம் சிறைச்சாலையிலேயே இடம் தேடுகின்றனர். காலத்தின் கொடுமை இது.

# காவி உடையணிந்த சக பௌத்த தேரருக்கு ஞானசார தேரர் கொடுத்த மரியாதை இது!





இலங்கையில் 2013-2014 ஆம் ஆண்டுகளில் சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து பொது பல சேனா அமைப்பினை கடுமையாக எதிர்த்த பௌத்த துறவி வத்தரக விஜித தேரர் ஆவார்.

வத்தரக விஜித தேரர் மஹியங்கனை பிரதேசசபை உறுப்பினராகவும், 'ஜாதிக பாலா சேனா எனும் அமைப்பின் தலைவராகவும் இருந்த ஒரு பௌத்த துறவியாவார்.

இலங்கையில் பௌத்த-முஸ்லிம் சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், சிறுபான்மையினருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனவாத பிரச்சாரங்களுக்கு எதிராகவும் அவர் பகிரங்கமாகச் செயல்பட்டார்.

2013-2014 காலப்பகுதியில் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான பொது பல சேனா அமைப்பு முஸ்லிம்களுக்கு எதிராக இனவாத பிரச்சாரங்களை முன்னெடுத்து வந்தது. இதற்கு எதிராக விஜித தேரர் குரல் கொடுத்தார்.

கொழும்பில் விஜித தேரர் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பிற்குள் பலவந்தமாகப் புகுந்த ஞானசார தேரர் தலைமையிலான பொது பல சேனா துறவிகள் அவருக்கு மிரட்டல் விடுத்துச் சந்திப்பைக் கலைத்தனர்.

முஸ்லிம்களுக்கு ஆதரவாகப் பேசுவதை நிறுத்துமாறு அவருக்குத் தொடர்ச்சியான கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டதால், அவர் தனது பாதுகாப்பிற்காக தலைமறைவாக வாழவேண்டிய சூழல் ஏற்பட்டது.

2014 ஆம் ஆண்டு ஜீன் மாதம் அலுத்கம மற்றும் பேருவளையில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம் பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்து, விஜித தேரர் மீதான தாக்குதல் உச்சக்கட்டத்தை அடைந்தது. 2014 ஜீன் 19 அன்று காலை, பாணந்துறை பகுதியில் கை கால்கள் கட்டப்பட்டு, ஆடைகள் களையப்பட்ட நிலையில், கத்தி வெட்டுக்காயங்களுடன் வீதியோரத்தில் அவர் சுயநினைவின்றி மீட்கப்பட்டார்.

அவரது உடலில் பல இடங்களில் வெட்டுக் காயங்கள் காணப்பட்டதோடு, அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இந்தக் கடத்தல் மற்றும் தாக்குதலுக்குப் பொது பல சேனா அமைப்பே காரணம் எனப் பல தரப்பினரும் குற்றம் சாட்டினர். இருப்பினும், அப்போதைய அரசாங்கமும் பொலிஸாரும் இந்த வழக்கில் மாறுபட்ட அறிக்கையை வெளியிட்டனர்

விஜித தேரர் தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டு நாடகமாடியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உண்மையான குற்றவாளிகளான இனவாத அமைப்புகளைக் காப்பாற்றவே அரசாங்கமும் பொலிஸாரும் இத்தகைய அறிக்கையை வெளியிட்டதாக மனித உரிமை அமைப்புகளும் சிறுபான்மை சமூகத் தலைவர்களும் குற்றம் சாட்டினர்.

# 6 சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சிங்கள பௌத்த தேரருக்கு அவுஸ்திரேலியாவில் 13 ஆண்டுகள் சிறைவாசம்!



இலங்கையைச் சேர்ந்த பௌத்த தேரர் ஒருவர், அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ணில் உள்ள வழிபாட்டுத்தலமொன்றில் ஆறு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 13 ஆண்டுகள் மற்றும் 2 மாதங்கள் சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நவோதுன்னே விஜித என்ற 71 வயதான தேரர், மெல்பேர்ணின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த தம்ம சரண என்ற பௌத்த வழிபாட்டுத் தலத்தின் பிரதம தேரராக பணியாற்றியவர் என அவுஸ்திரேலியாவின் ஏ.பி.சி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா கவுண்டி நீதிமன்றம் வியாழக்கிழமை (8) அவருக்கு இந்தத் தண்டனையை விதித்துள்ளது. நீதிபதி, குறித்த குற்றங்கள் நம்பிக்கைக்கு எதிரான மிகக் கடுமையான துரோகமாகும் எனக் குறிப்பிட்டதுடன், இலங்கை பௌத்த சமூகத்தில் பிக்கு பெற்றிருந்த மதிப்புமிக்க நிலையை அவர் தவறாகப் பயன்படுத்தியதாக தெரிவித்துள்ளார். 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற விசாரணையில் குறித்த தேரர் 17 குற்றங்களில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டார். அவற்றில் சிறுமியை பாலியல் ரீதியாக சேஷ்டை புரிந்த 9 குற்றச்சாட்டுகளும், சிறுமியுடன் அநாகரிகமான செயலில் ஈடுபட்ட 8 குற்றச்சாட்டுகளும் அடங்குகின்றன.

1994 முதல் 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மெல்பேர்னின் ளுிசைபெயடந மற்றும் Keysborough பகுதிகளில் இயங்கி வந்த பௌத்த வழிபாட்டுத்தலங்களில் இந்தக் குற்றங்கள் இடம்பெற்றதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. வழிபாட்டுத் தலத்திற்கு மத நடவடிக்கைகளில் பங்கேற்பதற்காக பெற்றோருடன் சென்ற சிறுமிகளை, குறித்த தேரர் தனது தங்குமிடத்துக்கு பல முறை அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் சிறுமிகளின் பெற்றோர் அருகிலுள்ள அறைகளில் இருந்த போதும் இந்தச் சம்பவங்கள் இடம் பெற்றதாக கூறப்பட்டது. பெற்றோர் தமது பிள்ளைகள் வழிபாட்டுத் தலத்தில் பாதுகாப்பாக இருப்பார்கள் என நம்பியிருந்த நிலையில், அந்த நம்பிக்கையை குறித்த தேரர் துஷ்பிரயோகம் செய்ததாக நீதிபதி தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீண்டகால உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், அவர்களில் சிலர் இன்றும் பௌத்த மத நடைமுறைகளுடன் தொடர்புடைய மன உளைச்சலை எதிர்கொள்வதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட பெண்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டு குறித்த தேரர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. விசாரணையின் போது தேரர் குற்றச்சாட்டுகளை மறுத்ததுடன், சம்பவங்கள் இடம்பெறவில்லை என அவரது சட்டத்தரணிகள் வாதிட்டனர். சில முறைப்பாட்டாளர்களை நினைவில் வைத்திருக்க முடியவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தேரர் குறைந்த பட்சம் 9 ஆண்டுகள் மற்றும் 4 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்த பின்னரே பிணையில் விடுதலை பெறுவதற்கான பரிசீலனைக்கு தகுதி பெறுவார். தண்டனை அறிவிக்கப்பட்ட பின்னர், தேரர் நீதிமன்றத்தில் தனது ஆதரவாளர்களை நோக்கி புன்னகைத்து கையசைத்தமை சில பாதிக்கப்பட்டவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியதாவும் ஏ.பி.சி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த தேரர் இலங்கையில் பிறந்தவர் என்பதுடன், தனது 15ஆவது வயதில் பௌத்த துறவறத்தில் இணைந்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் சுவீடனுக்குச் சென்று அந்நாட்டு குடியுரிமையைப் பெற்ற அவர், 1994ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்குச் சென்று தம்ம சரண என்ற பௌத்த வழிபாட்டுத்தலத்தின் பிரதம தேரராக பொறுப்பேற்றுள்ளார். சிறைத்தண்டனை நிறைவடைந்த பின்னர் அவர் நாடு கடத்தப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அவர் சுவீடனுக்குத் திரும்பிச் செல்லத் தயாராக இருப்பதாக அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை தேரரின் உடல்நிலை, குறிப்பாக அவருக்கு டிமென்ஷியா பாதிப்பு இருப்பதாக முன்வைக்கப்பட்டிருந்த வாதங்களும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான காலத்திற்கு முன்னர் இடம் பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது தண்டனை விதிக்கப்பட்டதன் மூலம் நிறைவடைந்துள்ளன.

# வரலாற்றில் முதன் முறையாக இஸ்ரேல் சுதந்திர தின விழாவில் இந்திய விமானிக்கு அழைப்பு!





கடந்த 30ம் தேதி துபாயிலிருந்து இஸ்ரேலுக்கு 174 பயணிகளுடன் சென்ற ஃபிளை துபாய் விமானம் 30 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது துணை விமானி அங்கிருந்த கோடாரியால் இந்திய விமானி ஸ்மித் மச்சாரை தாக்கினார். மேலும் விமானத்தை வேகமாக கீழே இறக்கி விபத்தை ஏற்படுத்தவும் அவர் திட்டமிட்டார்.

ஆனால் காயம் பட்ட நிலையிலும் அவருடன் போராடிய இந்திய விமானி ஸ்மித் மச்சார் காக்பிட் கதவை திறந்து பயணிகளின் உதவியுடன் அவரின் திட்டத்தை முறியடித்து அந்த விமானத்தை துபாய் விமான நிலையத்தில் தரையிறக்கினார்.

அந்த துணை விமானி கைது செய்யப்பட்டு அவருடன் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. தற்போது ஸ்மித் மச்சார் அபுதாபியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஸ்மித் மச்சாரை நிஜமான ஹீரோ என பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேல் பிரதமர் நெதன் யாகு, அமெரிக்க பிரதமர் டொனால்ட் டிரம்ப் உள்ளிட்ட பலரும் பாராட்டியிருந்தனர்.

இந்நிலையில், பிரதமர் மோடியுடன் சேர்ந்து இஸ்ரேலின் சுதந்திர தின தீபத்தை ஏற்ற வருமாறு இந்திய விமானி ஸ்மித் மச்சாருக்கு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அழைப்பு விடுத்திருக்கிறார். வழக்கமாக இந்த உயரிய மரியாதை இஸ்ரேலியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.. ஆனால் இந்த சிறப்பு மிக்க நிகழ்வில் இஸ்ரேலியர்கள் உங்களை அரவணைத்துக் கொள்வார்கள்' எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# கனடாவில் கோவிட் 19 மற்றும் இன்ப்ளூயன்ஸா பாதிப்புக்கள் உயர்வு!



கனடாவில் சளிக் காய்ச்சல் காலம் தொடங்கியுள்ளதை அரசின் அண்மைய புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. சமீபத்திய வாரங்களில் இருமல், காய்ச்சல் மற்றும் சளி அறிகுறிகளுடன் மருத்துவமனையை அணுகுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கனடா சுவாச வைரஸ் கண்காணிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சில முக்கிய விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கோவிட்-19 தொற்றை உறுதி செய்யும் பரிசோதனை விகிதம் 3.8வீதம் அதிகரித்துள்ளது.

இன்ஃப்ளூயன்ஸா காய்ச்சல் பாதிப்பு 3.7வீதம் உயர்ந்துள்ளது. பொது மக்களிடையே இருமல் மற்றும் காய்ச்சல் அறிகுறிகள் 1.5வீதம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பாதிப்பு 0.2வீதம் என்ற அளவில் வழக்கம் போல் கட்டுக்குள் உள்ளது. தற்போது பரவி வரும் வைரஸ்களில் 'என்டரோவைரஸ்' மற்றும் 'ரைனோ வைரஸ்' ஆகியவையே அதிகளவில் கண்டறியப்பட்டுள்ளன. இவை மேல் சுவாசக் குழாய் அழற்சி மற்றும் குடல் சார்ந்த அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடிய சாதாரண வைரஸ் தொற்றுகளாகும். ஆய்வகங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட 52 சுவாச வைரஸ் பரவல்களில் பெரும்பான்மையானவை (67.31 வீதம்) கோவிட்-19 தொற்றால் ஏற்பட்டுள்ளன.

கோவிட்-19 பாதிப்பில் 63% பேரும், இன்ஃப்ளூயன்ஸா பாதிப்பில் 55% பேரும் முதியோர்களே. சுளுஏ தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் (52%) சிறு குழந்தைகளாவார்கள். ஆயினும் நாட்டின் ஒட்டுமொத்த பாதிப்பு விகிதம் இன்னும் 'மிகக் குறைந்த அளவிலேயே' உள்ளது என்றும் இது பிராந்தியத்திற்குப் பிராந்தியம் மாறுபடும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நினைவேந்தல்களுக்கு அப்பால்.....!

இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்ததற்கு பின்னரான கடந்த பதினேழு வருடங்களுக்கும் அதிகமான காலப் பகுதியில் வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் தலைவர்களும் பழைய தியாக நினைவு ஊட்டல்களையும் அஞ்சலி நிகழ்வுகளையும் மாத்திரமே தங்களின் முதன்மையான அரசியல் நடவடிக்கையாகக் கொண்டிருக்கின்றனரா என்ற கேள்வி எழுகிறது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்காக இன்னுயிரைத் தியாகம் செய்த போராட்ட இயக்கங்களின் தலைவர்களுக்கும் போராளிகளுக்கும் யுத்தத்தில் பலியான மக்களுக்கும் நினைவேந்தல் செய்வது தமிழர்களின் உணர்வுபூர்வமான வரலாற்றுக் கடமையாகும். அதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

ஆனால், நினைவேந்தல்களையே தங்களின் பிரதான அரசியல் நிகழ்ச்சி நிரலாக மாற்றிக் கொள்வது தமிழ் சமூகத்தை எங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் வெறுமனே உணர்ச்சிபூர்வமான நினைவேந்தல் நிகழ்வுகளிலேயே தங்கள் அதீத கவனத்தையும் ஆற்றலையும் செலவழிக்கிறார்கள். மாறிவிட்ட உலகப் பூகோள அரசியல் சூழலிலும் இலங்கையின் புதிய உள்நாட்டு அரசியல் நிகழ்வுப் போக்குகளுக்கு மத்தியிலும் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய அரசியல் முதிர்ச்சியும் விவேகமும் அவர்களிடம் காணப்படுகிறதா என்றால், ஏமாற்றமே எஞ்சுகிறது.

பழைய போராட்டங்களின் தியாக நினைவுகளுடன் மக்களை எப்போதும் உணர்ச்சிப் பிழம்பாகப் பிணைத்து வைப்பதில் மாத்திரம் கவனம் செலுத்தும் தலைமைகளால் நடைமுறையில் தமிழ் மக்களுக்கு எதையும் சாதித்துக் கொடுக்க இதுவரையில் முடியவில்லை. வெறும் நினைவேந்தல் அரசியலால் சாதிக்க முடியாத தும், கைநழுவிப் போவதுமான நடைமுறை உண்மைகள் சிலவற்றை நாம் நோக்கியாக வேண்டும்.

போரில் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேசங்களின் பொருளாதாரத்தைச் சீரமைப்பது, ,ளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, வறுமையைப் போக்குவது போன்றவற்றில் தெளிவான திட்டமிட்ட வியூகங்கள் தமிழ்தலைமைகளிடம் இல்லை. பொருளாதாரப் பலம் இல்லாத ஒரு சமூகம் அரசியல் உரிமைகளுக்காக நீண்டகாலம் வீரியத்துடன் போராட முடியாது.

நினைவேந்தல் போராட்டங்களில் கவனம் குவியும்போது, எல்லையோரங்களில் நிகழும் மெதுவான நிலப்பறிப்புகள், தொல்பொருள் மற்றும் வனவளத் திணைக்களங்களின் பெயரால் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புகள், மற்றும் மக்கள்தொகை மாற்றங்கள் ஆகியவை குறித்து ஆக்கப்பூர்வமான சட்டரீதியான அல்லது இராஜதந்திர ரீதியான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை.

கொழும்பில் ஏற்படும் அரசியல் மாற்றங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான குறைந்தபட்ச நகர்வுகளையாவது சாத்தியப்படுத்துவதற்கோ, அல்லது சர்வதேச சமூகத்தின் ஆதரவை நடைமுறைச் சாத்தியமான கோரிக்கைகள் ஊடாகத் திரட்டுவதற்கோ முறையான உத்திகள் வகுக்கப்படுவதில்லை.

கடந்த 17 வருடங்களாக எவ்வித நடைமுறை முன்னேற்றமும் இன்றி உணர்ச்சி பூர்வமான பேச்சுக்களையும் நினைவேந்தல்களையும் மட்டுமே பார்த்து வளர்ந்த புதிய தமிழ் தலைமுறை இந்த அரசியல் வறட்சியினால் விரக்தியடைந்து புலம்பெயர்வதிலேயே அதிக ஆர்வம் காட்டுகிறது. இது தாயகத்தில் தமிழ் சமூகத்தின் சனத்தொதைப் பலத்தை மேலும் பலவீனப்படுத்துகிறது.தியாகங்களை மட்டுமே மூலதனமாக்கி எதிர்காலத்தைப் புறக்கணிப்பது பொறுப்பற்ற தனம்.

இன்றைய தேவை, உணர்ச்சி அரசியலில் இருந்து அறிவுபூர்வமானதும் தந்திரோபாய ரீதியானதுமான அரசியலை நோக்கி நகர்வதேயாகும். நினைவேந்தல்களை உரிய மரியாதையுடனும் அமைதியுடனும் முன்னெடுக்கும் அதே வேளை, தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் முதன்மையான கவனத்தை தமிழ்மக்களின் உடனடி வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், கல்வி, பொருளா தாரத்தை கட்டியெழுப்புவதிலும், சுயமான கட்டமைப்பு ரீதியான பலத்தை உருவாக்குவதிலும் செலுத்த வேண்டும்.

பழைய நினைவுகளில் மட்டுமே மூழ்கியிருக்கும் ஒரு சமூகம் வரலாற்றைப் போற்ற லாமே தவிர, புதிய வரலாற்றைப் படைக்க முடியாது. தமிழ் அரசியல் தலைமைகள் இனிமேலாவது வெறும் அஞ்சலி அமைப்பாளர்களாக ,ல்லாமல், தொலைநோக்கு பார்வைகொண்ட அரசியல் வழிகாட்டிகளாக மாற வேண்டும். அதுவே தியாகம் செய்த போராளிகளுக்கும் மக்களுக்கும் செய்யும் உண்மையான அஞ்சலியாக அமையும்.

# மேன்முறையீட்டு நீதிபதிகள் இருவர் நியமனம்!



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, மேல்நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க மற்றும் மேல்நீதிமன்ற நீதிபதி எச். எம். ஆர். எம். திலகரத்ன ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் 06 ஒக்டோபர் 2026 முற்பகல் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

தற்போது வெற்றிடமாக உள்ள மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பதவிகள் இரண்டுக்காக குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

# தமிழரசுக்கட்சி யாப்புக்கமைய தேர்தலை நடத்த இணங்கினால் வழக்கை விலக்குவேன் என்கிறார் வழக்காளி சந்திரசேகரம்!




தமிழரசுக்கட்சியின் அனைத்து தலைவர்களும் கட்சியின் யாப்புக்கு அமைவாக தேர்தலை நடத்துவதற்கு இணங்கிச் செயற்பட்டால், தான் தொடர்ந்துள்ள வழக்கை வாபஸ் பெறுவதாகத் பரா சந்திரசேகரம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய வழக்கு தொடர்பில் பரா சந்திரசேகரம் கடந்த 04 ஒக்டோபர் 2026 ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடகசந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சுற்றி தற்போது நடைபெற்று வரும் வழக்கு தொடர்பாக பரா சந்திரசேகரம் அவர்கள் விரிவான விளக்கத்தை வழங்கியுள்ளார். குறிப்பாக, உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பான தனது நிலைப்பாட்டையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவரது விளக்கத்தின் அடிப்படையில், கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்த பலரும் நடைபெற்ற தேர்தல் செயல்முறையில் தவறு ஏற்பட்டிருப்பதை அறிந்திருந்ததாகவும், கட்சியின் யாப்பு மற்றும் விதிமுறைகளுக்கு முரணான வகையில் நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக வாக்களிக்கத் தகுதியானவர்கள் 156 பேர் மட்டுமே இருந்த நிலையில் 326 பேர் வாக்களித்ததாகக் கூறப்படும் விடயம் முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. இது கட்சியின் யாப்பு மற்றும் தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானதா என்பது சட்டரீதியாகவும், ஆவணங்களின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

மேலும், ஶ்ரீதரன் ஐயா, குலநாயகம், மாவை ஐயா, சத்தியலிங்கம், குகதாசன் ஐயா, யோகஸ்வரன் ஐயா மற்றும் சுமந்திரன் ஐயா உள்ளிட்டவர்கள் தேர்தல் தொடர்பில் தவறு ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக் கொண்டு, பிரச்சினையைத் தீர்ப்பதற்காக புதிய தேர்தலை நடத்தி தலைவர் மற்றும் ஏனைய நிர்வாகப் பொறுப்பாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பாக முன்னர் இணக்கம் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

ஆனால், வழக்கு நீதிமன்றத்திற்கு வந்த போது முன்னர் தெரிவிக்கப்பட்ட நிலைப்பாட்டிலிருந்து மாறி, ஏற்கனவே நடைபெற்ற தேர்தலின் முடிவையே தொடர வேண்டும் என்ற நிலைப்பாடு முன் வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இது உண்மையாக இருந்தால், இயல்பாகவே ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. தவறு ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தால், அந்தத் தவறை சட்ட பூர்வமான புதிய தேர்தல் மூலம் ஏன் சரி செய்யக்கூடாது? ஒரு கட்சியின் பதவிகள் தனிநபர்களின் சொத்து அல்ல. அவை கட்சியின் உறுப்பினரகளால், கட்சியின் யாப்பு மற்றும் ஜனநாயக நடைமுறைகளுக்கு அமைவாக வழங்கப்படும் பொறுப்புகளாகும்.

எனவே, இந்த விவகாரத்தில் எனது நிலைப்பாடு தெளிவானது. நான் இந்த வழக்கைத் திரும்பப் பெறத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் அதற்கான ஒரே நிபந்தனை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பையும் சட்டத்தையும் மதித்து, முறையான மற்றும் ஜனநாயகமான புதிய தேர்தலை நடத்த வேண்டும். யார் தலைவர் என்பதோ, யார் எந்தப் பதவியில் இருப்பதோ எனது தனிப் பட்ட நோக்கம் அல்ல.

சட்டத்திற்கு அமைவான தேர்தல் வேண்டும். உறுப்பினர்களின் உரிமை பாதுகாக்கப் பட வேண்டும். கட்சியின் யாப்பு மதிக்கப்பட வேண்டும். ஜனநாயக நடைமுறை நிலைநாட்டப்பட வேண் டும். பதவியில் தொடர்ந்து இருப்பதற்காக அல்ல கட்சியின் எதிர் காலத்திற்காக சரியான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

சட்டப்படி தேர்தல் நடத்துங்கள். உறுப்பினர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். பிரச்சினைக்கு நிரந்தரமான ஜனநாயகத் தீர்வை வழங்குங்கள் என்றார்.

## நாடு திரும்பிய ஷிரந்தியை விசாரணைக்கு முன்னிலையாகுமாறு உத்தரவு!

நாடு திரும்பியுள்ள முன்னாள் முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவை எதிர் வரும் ஒக்டோபர் 13 அன்று நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவில் (குஊஐனு) முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். முன்னாள் முதல் பெண்மணி மலேசியாவிலிருந்து விமானம் மூலம் 05 ஒக்டோபர் 2026 நாடு திரும்பினார். மருத்துவ சிகிச்சைக்காக அவர் செப்டம்பர் 16-ஆம் திகதி அதிகாலையில் சிங்கப் பூருக்குப் புறப்பட்டுச் சென்றிருந்ததாகக் கூறப்படுகிறது. சிறிலியா சவிய' (Siriliya Saviya) அமைப்புடன் தொடர்புடைய நிதிப் பரிவர்த்தனைகள் குறித்து காவல்துறையின் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு (FCID) விசாரணை நடத்தி வரும் நிலையில் இந்த பயணம் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



Vivekananthan Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*



Rajabalini Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# பழ.நெடுமாறனின் பௌத்த மதத்தைத் தழுவிய மகன் அவுஸ்திரேலியாவில் மரணம்!





உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவரும் ஈழத்தமிழர்களின் இனிய தலைவருமான பழ.நெடுமாறனின் மகன் மாணிக்கம் நெடுமாறன் (57) அவுஸ்திரேலியாவில் காலமானார். இளம் வயதிலேயே உலக வாழ்க்கையைத் துறந்து பௌத்த மதத்தைத் தழுவிய மாணிக்கம் நெடுமாறன், அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் பௌத்த துறவியாக வாழ்ந்து வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில காலமாக கடுமையான புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், மெல்பேர்ணில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி 02 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை காலை அவர் உயிரிழந்ததாக உலகத் தமிழர் பேரமைப்பு தெரிவித்துள்ளது.

மாணிக்கம் நெடுமாறனின் இறுதிச் சடங்குகள் பௌத்த மத வழக்கப்படி மெல்பேர்ணிலேயே நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மகனின் இறுதிச்சடங்கில் பங்கேற்பதற்காக பழ.நெடுமாறனும் அவரது மனைவியும் அவுஸ்திரேலியா செல்ல தீர்மானித்திருந்ததாகவும், எனினும் பழ.நெடுமாறனின் கடவுச்சீட்டு முடக்கப்பட்டுள்ளதால் இருவராலும் இறுதிச்சடங்கில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உலகத் தமிழர் பேரமைப்பு தெரிவித்துள்ளது.

மகனின் இறுதிச்சடங்கில் கூட நேரில் பங்கேற்க முடியாத நிலை குடும்பத்தினருக்கு பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மாணிக்கம் நெடுமாறனின் மறைவு செய்தியைத் தொடர்ந்து தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்களது இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர். அன்னாரது மறைவு குறித்து ஈழநாடு பத்திரிகை சார்பிலும் வாசகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# கனடிய பொருட்களை மட்டுமே வாங்குவதில் தீவிரம் காட்டும் கனேடியர்கள்




அமெரிக்காவுடனான வர்த்தக மோதல் துவங்கி 19 மாதங்களாகியும், கனேடிய மக்களின் மன நிலைமையில் மாற்றம் இல்லை. கனேடிய பொருட்கள் மீது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூடுதல் வரிகள் விதித்தது, கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணைப்பதாக மிரட்டியது போன்ற விடயங்களால் கனேடிய மக்களுக்கு ஏற்பட்ட கோபம் குறைந்துள்ளதா?

கனேடிய மக்களுக்கு ட்ரம்ப் மீதான கோபம் குறைந்துள்ளதா, அவர் மீதான கோபத்தால் அமெரிக்கப் பொருட்களை புறக்கணித்து கனேடிய பொருட்களை மட்டுமே வாங்கும் மக்களின் மன நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக ஆய்வொன்று நடத்தப்பட்டது.

இந்நிலையில் அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் துவங்கி 19 மாதங்கள் ஆன நிலையிலும், கனேடியர்கள், கனேடிய பொருட்களை வாங்குவதற்கு முன்னுரிமை கொடுப்பதில் சற்றும் மாறவில்லை என்கின்றன ஆய்வு முடிவுகள்.

Abacus Data என்னும் ஆய்வமைப்பு மேற்கொண்ட ஆய்வில், அமெரிக்கப் பொருட்களைப் புறக்கணிக்கவேண்டும் என்னும் கனேடியர்களின் மன நிலையில் கொஞ்சமும் மாற்றமில்லை என்பது தெரியவந்துள்ளது.

2025ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், முதன் முறையாக, கனடாவுக்கு எதிராக கூடுதல் வரி விதிப்பு குறித்து அறிவிப்பு வெளியிட்டார் ட்ரம்ப். அப்போது, ட்ரம்பின் இந்த நடவடிக்கையால், அமெரிக்கப் பொருட்களைப் புறக்கணிக்கும் எண்ணம் உள்ளதா என Abacus அமைப்பு கேட்டபோது, 78 சதவிகிதம் கனேடியர்கள் ஆம் என பதிலளித்தார்கள். 19 மாதங்கள் ஆனபின்பும், அந்த எண்ணிக்கை 77 சதவிகிதமாகவே உள்ளது. அதற்கும் மேல், இனி அமெரிக்கப் பயணம் மேற்கொள்ளப் போவதில்லை என 2025இல் 32 சதவிகித கனேடியர்கள் கூறியிருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 52 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

விடயம் என்னவென்றால், அமெரிக்க எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் நிரப்புவதை தவிர்த்து வருவதாக 33 முதல் 39 சதவிகித கனேடியர்கள் தெரிவித்துள்ளார்கள். அத்துடன் கனேடியர்கள் வால்மார்ட் நிறுவனத்தில் பொருட்கள் வாங்குவதும், அமேசான் நிறுவனத்தில் பொருட்கள் வாங்குவதும் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




இன்று $200,000 வரை
ஒரு புதிய வீட்டின் மீது
மிச்சப்படுத்திடுங்கள்
நாளை அது நிறைய
குடும்பங்களாகவும் நிறைய
வீடுகளாகவும் பெருகும்



புதிய வீட்டின் மீது $200,000
வரையிலும் எவ்வாறு மிச்சப்படுத்துவது
என்பதை பின்வரும்இணையப்
பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்:
ontario.ca/MoreHomesFaster

Ontario

ஒன்ராறியோ அரசாங்கத்தின்
நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது.

# இலங்கை மீது தடைகள் விதிக்கப்படலாம்? அமெரிக்கா எச்சரிக்கை! வெளிவிவகார அமைச்சு விளக்கம்!



இலங்கை கடற்பரப்புக்கு அருகில் சிக்கியுள்ள ஈரானிய எண்ணெய் தாங்கி கப்பல்களுக்குத் தேவையான அத்தியாவசியச் சேவைகளை வழங்கினால், இலங்கை மீது தடைகள் விதிக்கப்படலாம் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரித்துள்ளதாக அமெரிக்காவின் 'வோல்ஸ்ட்ரீட் ஜர்னல்' (The Wall Street Journal) செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக அமெரிக்க அதிகாரிகள் இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கடல்சார் முற்றுகை மற்றும் பொருளாதாரத் தடைகள் காரணமாக, இலங்கையின் தென் மேற்கு கடற்கரையில் இருந்து சுமார் 15 கடல் மைல் தொலைவில் 20 வெற்று ஈரானிய எண்ணெய் தாங்கி கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன.

இந்தக் கப்பல்களில் உள்ள மாலுமிகள் உணவு, எரிபொருள் மற்றும் குடிநீர் தட்டுப்பாட்டினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனாவுக்கு ஈரானிய கச்சா எண்ணெயை விநியோகித்து விட்டுத் திரும்பிய இக் கப்பல்கள், இலங்கை மற்றும் மலேசிய எல்லைகளுக்கு அருகில் முடங்கியுள்ளன.

ஈரானியக் கப்பல்களுக்கு முன்னரும் இலங்கை சேவைகளை வழங்கியிருந்ததால், மலேசியாவுக்கு அருகில் இருந்த பல கப்பல்கள் கடந்த இரண்டு மாதங்களில் இலங்கையை நோக்கிய நகர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் கப்பல்களுக்குச் சேவை வழங்கும் உள்நாட்டு நிறுவனங்கள் மீது 'இரண்டாம் நிலைத் தடைகள்' (secondary sanctions) விதிக்கப்படலாம் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் கடந்த ஆகஸ்ட் மாதம் எச்சரித்திருந்தது. இதன் காரணமாக, கொழும்பு துறைமுக எல்லையை வந்தடைந்த ஈரானியக் கொடியுடன் கூடிய இரு கொள்கலன் கப்பல்களுக்குச் சேவைகளை வழங்குவது 'சாமர்த்தியமான செயலல்ல' என இலங்கை துறைமுக அதிகாரசபையும் தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தி குறிப்பிடுகிறது.

மேலும் இந்தத் தடைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இலங்கை அதிகாரிகள் 40 பேரைக் கொண்ட குழுவுக்கு அமெரிக்கத் தூதரகம் கடந்த செப்டம்பர் மாதம் மூன்று நாட்கள் பயிற்சிப் பட்டறையொன்றையும் நடத்தியுள்ளது.

அதேவேளை, கப்பல்களில் உள்ள மாலுமிகளிடமிருந்து உணவுக்காக உருக்கமான கோரிக்கைகள் கிடைக்கப் பெற்ற போதிலும், அரசாங்கத்தின் முறையான அனுமதியின்றி சேவைகளை வழங்க முடியாது என இலங்கை கப்பல் முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்துள்ளது. அதில் இலங்கைக்கு அருகிலுள்ள சர்வதேசக் கடற்பரப்பில் சிக்கியுள்ள ஈரானியக் கப்பல்களுக்குச் சேவைகளை வழங்கினால், இலங்கைக்கு எதிராகத் தடைகள் விதிக்கப்படலாம் என வெளியாகும் தகவல்கள் குறித்து வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்துள்ளது.

அதன்படி, அமெரிக்காவின் இந்த இரண்டாம் நிலைத் தடைகள் (Secondary Sanctions) என்பது ஏதேனும் குறிப்பிட்ட ஒரு நாட்டையோ அல்லது இலங்கையையோ இலக்கு வைத்துப் விதிக்கப்பட்டது அல்ல என வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளரும் பணிப்பாளர் நாயகமுமான துஷார ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

மாறாக இது உலகம் முழுவதற்கும் பொதுவாக நடைமுறைப்படுத்தப்படும் அமெரிக்காவின் சாதாரண உலகளாவிய கொள்கை மட்டுமே என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இலங்கை கடற்பரப்புக்கு அருகில் சிக்கியுள்ள ஈரானிய எண்ணெய் தாங்கி கப்பல்களுக்குத் தேவையான அத்தியாவசியச் சேவைகளை வழங்கினால், இலங்கை மீது தடைகள் விதிக்கப்படலாம் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரித்துள்ளதாக அமெரிக்காவின் 'வோல்ஸ்ட்ரீட் ஜர்னல்' (The Wall Street Journal) செய்தியொன்றை வெளியிட்டிருந்த நிலையிலேயே வெளிவிவகார அமைச்சு இந்த விளக்கத்தை அளித்துள்ளது.


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial
- Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

முப்பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னர் நீராகாரம் கூட அருந்தாது, உண்ணாவிரதம் எனும் சாத்வீகப் போராட்டம் மேற்கொண்டு தனது இன்னுயிரை ஆகுதியாக்கிய திலீபனின் நினைவேந்தல் பக்தி சிரத்தையுடன் உணர்வுபூர்வமாக இவ்வருடமும் நிகழ்ந்தேறியுள்ளது.

1987ம் ஆண்டு ராஜிவ்காந்தி — ஜே.ஆர்.ஜெயவர்த்தன இணக்கத்தில் உருவான இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் இந்தியா ஏற்றுக் கொண்ட ஐந்து அம்ச பொறுப்பை அது நிறைவேற்றத் தவறியதால் திலீபன் சாத்வீகப் போராட்டத்தில் இறங்க நேர்ந்தது.

அரசியல் போராட்டம் இரு கூர்வாள் போன்றது. ஒன்று ஆயுதங்கள் சம்பந்தப்பட்டது, மற்றது சாத்வீகமானது. ஆயுதங்களை ஒப்படைத்து நம்பிக்கை அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட ஒப்பந்தம் ஆரம்பத்திலேயே சந்தேகத்துக்குரியதானதால் திலீபன் சாத்வீகத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

காந்தி பெயரைக் கொண்ட இந்திய பிரதமர் ராஜிவ்காந்தி காந்தீயத்துக்கு மதிப்பளிக்கவில்லை. அந்நாட்டின் அப்போது இலங்கைத் தூதுவராக இருந்த டிக்சிற் காந்தீயத்தை காலில் போட்டு மிதித்தார்.




# ஒரு சிலையை அகற்றுவதால் நல்லிணக்கம் ஏற்படுமெனில்.....

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

இருவரதும் மனநிலையை ஒத்த எதிர்பாராத நிகழ்வொன்று கடந்த வாரம் திலீபனின் நினைவேந்தல் முடிவை அடுத்து நல்லூரில் இடம் பெற்றது. உலகளாவிய ரீதியில் தாயகத் தமிழர்களின் இதயக்கூட்டுக்குள் வேலினால் தாக்கியது போன்ற வேதனையை இது உருவாக்கியது.

இது விடயத்தில் தீர்ப்புக் கூறும் நோக்கத்தில் இது எழுதப்படவில்லை. ஆனால் இச்சம்பவத்தால் ஏற்பட்டுள்ள தாக்கம், தற்போதைய இலங்கை அரசியலின் ஆட்சிபீடத்தின் போக்கு என்பவைகளை மேலோட்டமாகப் பார்ப்பதுடன், தமிழ் தேசிய அரசியலாளர்கள் மத்தியில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள குழப்பநிலை, இதன் பின்னணி ஆகியவைகளை நோக்குவதே இதன் அடிப்படை.

திலீபன் உண்ணாவிரதம் இருந்த போது தமிழர்களின் தலைமைக் கட்சி எனப்படும் தமிழரசுக் கட்சியினரோ அல்லது தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரோ சாத்வீகப் போராட்டம் இடம் பெற்ற நல்லூர் பக்கம் திரும்பிக் கூட பார்க்கவில்லை என்பதை முதலில் இங்கு குறிப்பிட வேண்டும். அப்போது இவர்கள் இந்தியாவின் தயவில் அல்லது இந்திய பாதுகாப்பில் தங்கியிருந்தது இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். தமிழரசுக் கட்சியின் நெருங்கிய ஆதரவாளரான திரு. சி.வி.கே.சிவஞானம் அவர்கள் அப்போது யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளராக பணியாற்றிக் கொண்டிருந்தார்.

திலீபனின் திருவுடல் சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் வைத்து அவரது விருப்பத்துக்கிணங்க யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ஒப்படைக்கப்பட்டது. அதன் முதலாவது ஆண்டு நிறைவுற்ற 1988 செப்டம்பர் 28ம் திகதி நல்லூர் மேற்கு வீதியில் ஒரு வரலாற்று நிகழ்வு இடம் பெற்றது. நல்லூர் திருமண மண்டபம் என்று ஆரம்பத்திலும், பின்னர் நல்லூர் கலாசார மண்டபம் என்றும் அழைக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான கட்டிடத்தின் மேற்குப் பகுதியே இந்தக் களம்.

தியாகி திலீபன் (இ.பார்த்திபன்) தியாக தீப தூபி திறப்பு விழா என்று இதற்கான பிரசுரத்தில் தலைப்பிடப்பட்டிருந்தது. இந்தத் தூபி யாழ்.மாநகராட்சி மன்ற ஊழியர்களின் அன்பளிப்பு என்றும் இப்பிரசுரத்தில் பொழிப்பாக பொறிக்கப்பட்டிருந்தது. மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தியாக தீப தூபியின் மின் விளக்கை திலீபனின் தந்தை ஆசிரியர் இராசையா அவர்கள் ஏற்றி வைத்தார். விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் ஜொனியின் தந்தை வி.எஸ்.விக்னேஸ்வரன் தூபியில் பதிக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து வைத்தார். நல்லை ஆதீனத்தின் முதலாவது குரு முதல்வராக விருந்த சிறீலசிறீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், வணபிதா ஆர். ஜோசெப், மௌலவி சதக் அப்துல்லா ஆகியோர் இந்நிகழ்வில் ஆசியுரை வழங்கி சிறப்பித்தனர். இந்த வரலாற்றை சிலர் மறந்திருப்பர். பலர் அறியாதிருப்பர்.

நல்லூரில் திலீபன் நினைவேந்தல் மையத்தில் இம்முறை முதன்முதலாக வெண்கலத்திலான அவரது சிலை நிறுவப்பட்டு வணக்க நிகழ்வுகள் இடம் பெற்றன. இது முடிவுற்ற பின்னர் திடுதிப்பென அவ்விடத்துக்குள் நுழைந்த காவற்துறையினர் திலீபன் சிலையை கழற்றிச் சென்றதை பல்வேறு இணைய வழிகளாக உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் பார்த்தனர். இதற்கு முன்னராக யாழ்ப்பாணம் காவற்துறை அதிகாரிகள் யாழ். மாநகர முதல்வருடன் (மேயர்) தொடர்பு கொண்டு திலீபன் சிலை தொடர்பான பல்வேறு தகவல்களையும் பெற்றுள்ளனர். இதனை மாநகர முதல்வர் மதிவதனி தமது துணைமுதல்வர் சகிதம் ஊடங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

திலீபனின் சிலை அங்கு நிறுவப்பட்ட பின்னரே அதற்கான அனுமதி விண்ணப்பம் தங்களுக்கு அனுப்பப்பட்டதாகவும், தற்காலிகமாக அது நிறுவப்படுவதாக அவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், நினைவேந்தல் முடிந்ததும் சிலை அங்கிருந்து அகற்றப்படுமென தெரிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை காட்டவில்லையெனவும் மாநகர முதல்வர் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

மதிவதனி அவர்களை யாழ்ப்பாண மாநகர முதல்வராக நியமிப்பதில் திரு. சி.வி.கே.சிவஞானம் அவர்கள் அதீத அக்கறை காட்டியதாக சொல்லப்படுவதுண்டு. மாநகர ஆணையாளராக தமக்குள்ள அனுபவத்தால் மதிவதனியை இவர் வழிநடத்தி வருவதாகவும், மதிவதனியை மாநகர முதல்வராக்குவதற்காகவே டக்ளஸ் தேவானந்தா கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு அவரது அலுவலகம் நாடி திரு.சிவஞானம் சென்றதாகவும் மாநகரசபை வட்டாரங்களில் சொல்லப்பட்டு வருகிறது. ஓரளவுக்கு இதில் உண்மை இருந்ததற்கு திரு. சிவஞானம் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவராக பதவி வகிப்பது காரணமென கட்சிக்குள்ளும் பலரது கருத்தாக இருந்து வருகிறது.

சிலை அகற்றலுக்குப் பின்னர் இவ்விடயம் பூதாகரமாக மாறியுள்ளது. ஆனால், இதற்கும் தங்களுடைய அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்று அமைச்சர் சந்திரசேகரன் உடனடியாகவே தெரிவித்தார். அப்படியானால் யாழ்ப்பாண காவற்துறையினர் இலங்கை அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இயங்காது தனித்து இயங்குகின்றனரா அல்லது வடக்கு மாகாணசபையின் நிர்வாகத்தில் இயங்குகின்றனரா என்ற வினா எழுகின்றது. ,தற்கான பதிலையும் அமைச்சரே கூறவேண்டும்.

சிலை நிறுவப்பட்டது தற்காலிகமானதாக இருக்குமென அதன் ஏற்பாட்டாளர்கள் கூறியிருக்கலாம். அப்படியானால் 12ம் நாள் இரவே சிலை அங்கிருந்து அகற்றப்பட வேண்டுமென யாழ்ப்பாண மாநகரசயையினர் எதிர்பார்த்தனரா? சிலையை அகற்றுவதற்கு ஓரிரு நாள் அவகாசம் கொடுக்கக் கூடாது என்று சட்டம் கூறுகிறதா?

காவற்துறையினர் இது விடயமாக தங்களுடன் உரையாடியதும், அதனை அகற்றுவதற்கு பொலிசாரைத் தவிர்த்து தங்களால் கையாண்டிருக்கக் கூடிய முறைகளை பின்பற்றலாமென மாநகர நிர்வாகம் ஏன் சொல்லவில்லை. கொலைகாரருக்குக் கூட நீதி விசாரணையில் பல வகையான தண்டனைகள் உண்டு. கடூழிய சிறைத்தண்டனை, சாதாரண சிறைத்தண்டனை, ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை, வீட்டுச் சிறை என்று பல வகை உண்டு. சிலையை ஓரிரு நாட்களுக்குள் அகற்றாததை பாரதூரமான குற்றமாக கருத இடமில்லை.

அவ்வாறு தான் காவற்துறையினர் கருதுவார்களாயின் நீதிமன்றத்தை நாடி சட்டப்படி சிலை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. சிலையை நிறுவுவதற்கு அனுமதி பெற்றவர் தலைமறைவாகி விட்டதாக சொல்லப்படுகிறது. ஆனால் அவரைத் தேடி காவற்துறையினர் அவரது முகவரி அமைந்த இடத்துக்குச் சென்றதாக தகவல் இல்லை. நிலைமையை இதனூடாகப் பார்க்கின் சிலையை அகற்றுவதிலேயே காவற்துறையினரின் கவனம் முழுமையாக இருந்துள்ளது. இதற்கு இயைவாக மாநகரசபை நிர்வாகம் நடந்து கொண்டதாகவே கருத இடமுண்டு.

நினைவேந்தல் என்பது புனிதமான இடம். தலைமறைவான குற்றவாளி ஒருவரை தூக்கிச் செல்வது போன்று காலணிகளுடன் காவற்துறையினர் சென்றதை கண்டிக்கும் உரிமை கூட யாழ்ப்பாண மாநகரசபைக்கு இல்லையா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. மாநகர நிர்வாகத்தில் பல்லாண்டு அனுபவமும் திறமையும் பெற்ற சி.வி.கே.சிவஞானம் அவர்களிடம் இது விடயத்தில் மாநகர முதல்வரோ நிர்வாகமோ ஏன் ஆலோசனை பெறவில்லையென்றும் கேட்கப்படுகிறது.

இவ்வாறான கேள்விகளுக்கு விடை காணப்படும் போது மறைக்கப்பட்டு வரும் பல உண்மைகள் வெளிவரக் கூடும். வருங் காலங்களில் நல்லூரில் திலீபன் நினைவேந்தலை தடுப்பதில் சில தீயசக்திகள் தீவிரமாக இருக்கின்றதா என்பதை கண்டறியவும் இது தொடர்பான விசாரணைகள் அவசிமாகிறது.

இனங்களுக்கிடையே முரண்பாடு ஏற்பட்டு நல்லிணக்கத்துக்கு குந்தகம் ஏற்படாது தடுப்பதற்காகவே திலீபன் சிலையை அகற்ற நேர்ந்ததாக அதனை அகற்றிய காவற்துறையினர் விளக்கம் கொடுத்துள்ளனர். இதனை ஒட்டியதாக சிங்கள அமைச்சர் ஒருவரின் கருத்தும் வெளி வந்துள்ளது. ஆனால் நீதி மற்றும் நல்லிணக்கத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஹர்ச நாணயக்கார இது விடயத்தில் இன்னமும் மௌனியாகவே இருக்கிறார்.

தியாகி திலீபனின் சிலை அகற்றப்பட்டமைக்கு நல்லிணக்கமே காரணமென காவற்துறையினர் கூறுவது உண்மையெனில், திடீர் திடீரென சந்திகளிலும் சந்தைகளிலும் அரச மர நிழல்களிலும் முளைக்கும் சிலைகளையும், வெடுக்குநாறிமலையில் சட்டத்தை மீறி பௌத்த துறவிகளால் நிறுவப்படும் சிலையையும் நல்லிணக்கம் எனக் கூறி காவற்துறையினரால் அகற்ற முடியுமா?



# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

03 ஒக்டோபர் 2026 2026 முதல் 09 ஒக்டோபர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர் களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## நினைவழியா நினைவுகள்



### திருமதி சத்தியபாமா கௌரி குகன்

ஹட்டன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர் களது நினைவழியாத நினைவு நாள் 28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைஞ்சலி



### திருமதி பாக்கியம் தனிநாயகம்

அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 03 ஒக்டோபர் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, செஞ்சோலை பாரதி ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கி யம் தனிநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு, செஞ்சோலை, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



### திரு பாலசுப்பிரமணியம் ஐயாத்துரை

வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் முல்கைம் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்டிருந்த பாலா என்று அன்பாக அழைக்கப்படும் திருபாலசுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களது ஆத்மசாந்திக்காக 28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் சார்பாக கனடாவில் வசிக்கும் அவரது சஆகோதரி ராணி அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார் திரு பாலசுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## மஹாலய விரத உபயம்



### திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 09 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.



# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



26 செப்டம்பர் 2026 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி டிலக்சினி நிரஞ்சன் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி டிலக்சினி நிரஞ்சன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



27 செப்டம்பர் 2026 ஞாயிற்றுக்கிழமை சாமியான் அரசடி கரவெட்டியைச் சேர்ந்தவர்களான திரு திருமதி இராஜதுரை மாணிக்கம் இணையரது நினைவாக கனடாவில் வாழம் அவர்களது பிள்ளைகள் மஹாலய விரத உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் முல்கைம் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பாலா என்று அன்பாக அழைக்கப்படும் திரு பாலசுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களது ஆத்ம சாந்திக்காக கனடாவில் வசிக்கும் அன்னாரது சகோதரி திருமதி ராணி ஜெகதீஸ்வரன் அவர்கள் அன்னாரது குடும்பத்தினர் சார்பாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை ஹட்டன் நவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களது நினைவழியாத நினைவு நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



03 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



03 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



03 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



05 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி மதன் துஷாந்தி இணையர்களின் செல்வப்புதல்வி உருத்திரசாயி மதனின் ஆறாவது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி உருத்திரசாயி தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



06 ஒக்டோபர் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சுபா கிருஷ்ணா அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சுபா கிருஷ்ணா அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



06 ஒக்டோபர் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சுபா கிருஷ்ணா அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சுபா கிருஷ்ணா அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



06 ஒக்டோபர் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சுபா கிருஷ்ணா அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சுபா கிருஷ்ணா அவர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



08 ஒக்டோபர் 2026 வியாழக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



09 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை ஊரெழுவைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களது 56வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் மஹாலய விரத உபயமாகவும் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை மஹாலய விரத உபயமாக மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களை நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



17 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

# திலீபனின் சிலையும் தமிழ்க்கட்சிகளும்!

நினைவுச் சின்னங்களை சிலைகளைச் சிதைப்பது, உடைப்பது, அகற்றுவது என்பது சிங்கள பௌத்த அரசியலின் பல தசாப்த கால நடைமுறை. அதற்கு எதிராக சிலைகளைத் திரும்பத் திரும்பக் கட்டுவது நினைவுச் சின்னங்களை திரும்பத் திரும்பக் கட்டுவது என்பது தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் பல தசாப்த கால நடைமுறை

நினைவுகள் தொடர்ச்சியைக் குறிக்கும். வரலாறு என்பது தொடர்ச்சி தான். நினைவுகளை மையமாக வைத்துத் தமிழ்மக்கள் திரட்சியுறக் கூடாது என்ற அடிப்படையில் தான் சிலைகளும் நினைவுச் சின்னங்களும் அகற்றப்படுகின்றன. அல்லது சிதைக்கப்படுகின்றன.

தமிழ் மக்கள் தங்கள் நினைவுகளை சிலைகளாகவோ சின்னங்களாகவோ அல்லது வேறு வடிவங்களிலோ முன்நிறுத்துவதன் மூலம் முதலாவதாக தமது நினைவுகளை அவற்றின் தொடர்ச்சியைப் பாதுகாக்கிறார்கள். இரண்டாவதாக, அதன்மூலம் வரலாற்றை வரலாற்றுத் தொடர்ச்சியைப் பாதுகாக்கின்றார்கள். மூன்றாவதாக, அதை இன அழிப்புக்கு எதிரான ஒரு போராட்ட வடிவமாக முன்னெடுக்கிறார்கள்.

எனவே நினைவுகளை நினைவுச் சின்னங்களை சிலைகளை அழிப்பது ஓர் அரசியல். அது ஒடுக்கும் அரசியல். இனஅழிப்பு அரசியல்.அதற்கு எதிராக நினைவுகளைப் புதுப்பிப்பது நினைவுகளை மறந்து விடாமல் இருப்பது நினைவுகளை மையமாக வைத்துத் தேசத்தைத் திரட்டுவது என்பது இன ஒடுக்குமுறைக்கு எதிரான ஓர் அரசியல். இன அழிப்புக்கு எதிரான ஓர் அரசியல். இலங்கைத் தீவின் பல தசாப்த கால அரசியல் எனப்படுவது இந்த இரண்டு முரணான போக்குகளால் கட்டமைக்கப்பட்டது தான்.

இந்த வரலாற்று அனுபவத்தின் பின்னணியில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை திலீபனின் சிலை அகற்றப்பட்டது தொடர்பான விடயத்தைப் பார்க்கலாம்.

திலீபனின் சிலை ஒரு விவகாரமாகியது இதுதான் முதல் தடவை அல்ல. இதற்கு முன்னரும் அந்த நினைவுத் தூபி சிதைக்கப்பட்டிருக்கிறது. இம்முறை ஒரு மார்பளவு சிலை வைக்கப்பட்டது. அந்தச் சிலை ஃபைபரில் வார்க்கப்பட்டு வெண்கல நிறம் பூசப்பட்டுள்ளது. அந்தச் சிலை திலீபனின் புறவுருவத்தை ஒத்திருக்கிறது. ஆனால் முகத் தசைகள் இறுகிப் போய், திலீபனை மூப்பாகக் காட்டுகின்றன. அது தீலீபனைத் தத்ரூபமாகப் பிரதிபலிக்கவில்லை.

இதேபோன்ற விமர்சனங்கள் காரணமாக கடந்த மாதம் நேபாளத்தில் திறக்கப்படவிருந்த 45 தியாகிகளின் சிலைத் திறப்பு விழா ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நேபாளத்தில் ஏற்பட்ட ஜென்சி'' கிளர்ச்சியின் போது செப்டம்பர் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் கொல்லப்பட்ட 45 தியாகிகளின் நினைவு நாள் இந்த செப்டம்பர் மாதம் அனுஷ்டிக்கப்பட்டது. அதையொட்டி அந்த 45 பேர்களுடைய சிலைகள் திறக்கப்படவிருந்தன. ஆனால் அந்தச் சிலைகள் தமது பிள்ளைகளின் முகங்களை ஒத்திருக்கவில்லை என்று பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவசர அவசரமாகத் திறப்பு விழாவை நோக்கிச் சிலைகளைச் செதுக்கியபடியால் அவை தத்ரூபமாக அமையவில்லை என்று சிற்பிகள் தெரிவிக்கிறார்கள். அதைத் தொடர்ந்து சிலை திறப்பு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திலீபனின் மார்பு வரையிலுமான அந்தச் சிலை அவரை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை என்ற விவகாரத்தைத் தமிழ்மக்கள் தங்களுக்குள் தீர்த்துக் கொள்வார்கள். அது பிரச்சனையில்லை. இங்கு பிரச்சினை என்னவென்றால், திலீபனின் சிலை ஒன்றை வைக்க முடியாது என்று அரசாங்கம் கூறுவது தான். அது சட்டப்படி குற்றம் என்ற பொருள்பட அமைச்சரவைப் பேச்சாளர் கூறுகிறார். சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பின் உறுப் பினருடைய சிலை அது என்பதனால் அதனை அங்கே வைத்தது சட்டப்படி குற்றம் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாகத் தெரிகிறது. இது ஏற்கனவே இருந்த அரசாங்கங்களின் நிலைப்பாடு தான்

அதே சமயம் இந்த விடயத்துக்கும் அரசாங்கத்துக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல அமைச்சர் சந்திரசேகரன் கருத்துக் கூறியுள்ளார். அமைச்சர் சந்திரசேகரன் யார்? வட மாகாண விவகாரங்களைக் கையாள்வதற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அமைச்சர். அவர் கூறுகிறார், சிலை தூக்கப்பட்டதற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் தொடர்பு ஏதும் கிடையாது என்று. இந்த விடயத்தில் யாழ். மாநகர சபை முடிவெடுத்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் செய்யாத வேலையை போலீசார் செய்தார்கள் என்றும் சந்திரசேகரன் கூறுகிறார்.




அதாவது சந்திரசேகரன் இந்த விடயத்தில் மாநகர சபையையும் அதற்கு எதிராக விமர்சனங்களை முன்வைக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் மோத விட விரும்புகிறார் என்று தெரிகிறது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானத்தை நேரடியாகக் குற்றம் சாட்டியிருக்கிறது. சிவஞானம் அதை மறுத்திருக்கிறார். தற்காலிகமாக அந்தச் சிலையை வைப்பதற்கு அனுமதி கேட்கப்பட்டதாக மாநகர சபை கூறுகிறது. அப்படியென்றால் தற்காலிகமாக வைக்கப்பட்ட சிலையை தேவை முடிந்ததும் அகற்றலாமா? தற்காலிகமாக சிலையை வைப்பதற்கு சட்ட ரீதியாக ஏற்பாடுகள் உண்டா? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் கேட்டதற்காக அந்தச் சிலையை தற்காலிகமாக வைப்பதற்கு மாநகர சபை ஒப்புக் கொண்டது என்றால் தற்காலிகமாக சட்டத்தை மீறுவதற்கு மாநகர சபை தயாராக இருந்ததா?

தமிழரசு கட்சி இந்த விடயத்தில் ரிஸ்க் எடுக்கவில்லை என்பது தெரிகிறது. அது விவகாரத்தை சட்டரீதியாக அணுக முயற்சிக்கிறது. ஆனால் இது சட்ட ரீதியான விவகாரம் அல்ல. சட்டப்படி பார்த்தால் திலீபன் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பின் உறுப்பினர். எனவே சட்டரீதியாக அவரை நினைவு கூர அரசாங்கம் அனுமதிக்காது. அதனால் தமிழ்த்தரப்பு அவர் அகிம்சை வழியில் போராடி உயர் நீர்த்தவர் என்ற காரணத்தைக் குவிமயப்படுத்தி அவரை நினைவு கூர்ந்து வருகிறது. சட்டப்படி பார்த்தால் தற்காலிகமாகக் கூட சிலையை அனுமதித்திருக்க முடியாது. எனவே தமிழரசுக் கட்சி ஒரு கட்டத்துக்கு மேல் சட்ட மறுப்பாகப் போராடத் தயாரில்லை என்பது தான் மெய்நிலை. போராட்டம் என்பது ஒரு வகையில் சட்ட மறுப்புத் தான். சட்டரீதியாக ஒரு கட்டத்துக்கு மேல் போராட முடியாது.

தமிழரசுக் கட்சி மாநகர சபையின் ஆளுங்கட்சி. இந்த அடிப்படையில் அது ஒரு கட்டத்துக்கு மேல் ரிஸ்க் எடுக்கவில்லை என்பது தான் உண்மை. இந்த விடயத்தில் போலீசார் திலீபனின் நாட்கள் முடியும் வரை சிலையில் கை வைக்காமல் பொறுத்திருந்திருக்கிறார்கள். நினைவு நாட்களின் மத்தியில் சிலையை அகற்றினால் வரக்கூடிய உணர்ச்சிக் கொந்தளிப்பான விளைவுகளைத் தவிர்ப்பதற்காக அவர்கள் இறுதி நாள் வரை காத்திருந்து, நினைவு நாள் முடிந்ததும் சிலையை அதிகாலையிலேயே அகற்றியிருக்கிறார்கள்.

அதாவது திலீபனின் சிலை வைக்கப்படுவதை அரசாங்கம் அனுமதிக்காது. படத்தை வைத்து அல்லது கட்டவுட்டை வைத்து நினைவு கூர்வதை ஓரளவுக்கு சகித்துக் கொண்டாலும் நிரந்தரமாக ஒரு சிலை வைக்கப்படுவதை அரசாங்கம் சகித்துக்கொள்ளாது என்பதைத்தான் அது காட்டுகிறது. இது நினைவு கூர்வதில் தமிழ் மக்களுக்கு உள்ள வரையறைகளை உணர்த்தும் இடம்.

ஆனால் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நினைவு கூரும் உரிமை உண்டு. நிலை மாறு கால நீதியின் நான்கு தூண்களில் ஒன்று என்று கூறப்படுகின்ற இழப்பீட்டு நீதி என்ற பிரிவின் கீழ் தமிழ் மக்களுக்கு நினைவு கூர்வதற்கான உரிமை உண்டு. அந்தத் தீர்மானத்துக்கு அப்போது இருந்த இலங்கை அரசாங்கம் அனுசரணை வழங்கியது. இலங்கை அரசாங்கம் ஒன்றின் இணை அனுசரணையோடு நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் அது.

தமிழ் மக்கள் நிலைமாறு கால நீதியை ஏற்றுக் கொள்ளவில்லை. இக்கட்டுரையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் நிலைமாறு கால நீதிக்குரிய தீர்மானத்தின் தொடர்ச்சியாகத் தான் பதவிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் ஐநாவுக்குச் சென்று அங்கே அனைத்துலக சமூகத்துக்கு விளக்கங்கூற வேண்டியிருக்கிறது.

நிலைமாறு கால நீதியின் தூண்களில் ஒன்றாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நினைவு கூரும் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது .ஆனால் கடந்த 11 ஆண்டுகளாக நினைவு கூர்தல் ஒரு சட்டப் பிரச்சினையாகவே கையாளப்பட்டு வருகிறது. இந்த விடயத்தில் இழப்பீட்டு நிதிக்கான அலுவலகத்துக்குரிய சட்ட ஏற்பாடுகளை வரையும் போது, அப்பொழுது நிலை மாறு கால நீதியின் தமிழ்ப் பங்காளிகளாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பொருத்தமான ஏற்பாடுகளை அங்கே இணைக்கத் தவறி விட்டது என்று ஒரு சட்டச் செயற்பாட்டாளர் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். அதனால் தான் கடந்த 11 ஆண்டுகளாக நினைவு கூர்தல் ஒரு சட்டப் பிரச்சினையாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.

அரசாங்கம் இந்த விடயத்தை இரண்டு தளங்களில் கையாள முற்படுகிறது. முதலாவது, இதை ஒரு சட்டப் பிரச்சினையாகக் காட்டுகிறது. இரண்டாவதாக, இது தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடு என்று காட்டப் பார்க்கிறது.

அமைச்சர் சந்திரசேகரன் தமிழ்க் கட்சிகளுக்கு இடையே மோதலை ஊக்குவிக்கின்றார். தமிழ்க் கட்சிகளும் இந்த விடயத்தில் இரண்டாக நிற்கின்றன. மட்டக்களப்பில் திலீபனின் நினைவு நாளை இரண்டாக நின்று அனுஷ்டித்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் அதை அவ்வாறு இரண்டாக நின்று அனுஷ்டிக்கவில்லை. ஆனால் நினைவு நாட்கள் முடிந்ததும், சிலையை வைத்துக் கொண்டு இரண்டாகி நின்று மோதுகிறார்கள். யாருக்கு எதிராக ஒன்றாகத் திரள வேண்டுமோ அது நடக்கவில்லை. மாறாக தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஒருவர் மற்றவர் மீது குற்றச்சாட்டுகளை வைக்கிறார்கள்.

ஆனால் இது சட்டப் பிரச்சினையும் அல்ல.தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளின் பிரச்சினையும் அல்ல. இது தமிழ் மக்களின் நினைவு கூர்வதற்கான அரசியல் உரிமை அதாவது தமிழ் மக்களின் கூட்டுரிமையோடு சம்பந்தப்பட்ட விவகாரம். இது ஓர் அரசியல் விவகாரம். இதனை அரசியலாகத் தான் பார்க்க வேண்டும். அரசியலாகத் தான் கையாள வேண்டும். அதற்கு எதிரான போராட்டங்கள் அரசியல் போராட்டங்களாகத் தான் இருக்கலாம். தமிழ்ச் சமூகத்தின் நினைவு கூரும் உரிமை தொடர்பான ஓர் அரசியல் போராட்டம் இது.

எனவே இதை அதற்குரிய அரசியல் அடர்த்தியோடு போராட வேண்டும். இந்த விடயம் தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண் பாடுகளைப் பிரதிபலிப்பதை இயன்ற அளவுக்குத் தவிர்க்க வேண்டும். அதாவது அரசாங்கம் விரும்புவதை தமிழ்க் கட்சிகள் செய்யக்கூடாது.

# முதிர்ச்சியடையாத ஈழத்தமிழர் அரசியல் மூளை?

சில தினங்களுக்கு முன்னர் சில புகைப் படங்களை பார்த்தேன். தமிழர் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மணோ கணேசனும் மற்றும், ஜனநாயக மக்கள் முன்னணியின் துணைத்தலைவர் பாரத் அருள்சாமியும், Observer Research Foundation Vivekananda International Foundationபோன்ற இந்தியாவின் முன்னனணி சிந்தனைக் கூடங்களில் கலந்துரையாடலில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனை பார்த்த போது, முதலில் மகிழ்ச்சி ஏற்பட்ட கூடவே கவலையும் ஏற்பட்டது. நமது அரசியல் தலைவர்கள் என்போர் செய்ய வேண்டிய வேலை ஆனால் செய்யவில்லை. சில வருடங்களுக்கு முன்னர் நமது தமிழ்த் தேசியவாத அரசியல்வாதிகளை நோக்கி இவ்வாறானதொரு கோரிக்கையை முன் வைத்திருந்தேன். மனோவின் சந்திப்புக்களை அறிந்த போது, அது தான் நினைவுக்கு வந்தது.




இரா.சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த போது, அடிக்கடி தான் ராஜதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுவதாகக் கூறிக் கொண்டிருந்தார். கொழும்பில் பல நாட்களும், திருகோணமலையில் சில நாட்களுமாக இருந்து கொண்டு, எவ்வாறு இராஜ தந்திரப் போர் புரிவது? இந்தக் காலத்தில், எனது எழுத்துக்கள் வழியாக ஒரு விடயத்தை தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றேன்

அதாவது, இந்தியாவை (புதுடில்லியை) நோக்கிச் செல்லுமாறும், இப்போது மனோகணேசன் மேற்கொண்டது போன்ற சந்திப்புக்களில் ஈடுபடுமாறும் அறிவுறுத்தியிருந்தேன். இந்தியாவை (புதுடில்லி) நோக்கிச் செல்வது என்பது தான், ஈழத் தமிழர்களுக்கான ராஜதந்திரத்தின் அஸ்திபாரமாகும்.

அப்போது இதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்த, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் புதுடில்லி நோக்கிச் செல்லும் அவசியத்தை கட்சிக்குள் வலியுறுத்தினார். அதற்கு சம்பந்தன் கூறிய பதில்தான் சுவாரசியமானது. நாங்கள் அப்படிச் செய்தால், சிங்கள மக்கள் கோபிப்பார்கள். பின்னர் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தது போது, ஒரு முறை கூட உத்தியோகபூர்வமாக புதுடில்லி செல்லவில்லை. ஆனாலும் தங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குமாறு, கூட்டமைப்பு கேட்டுக் கொண்டேயிருந்தது. ஒருவாறு, அவ்வாறானதொரு வாய்ப்பை பிரதமர் மோடி, வழங்கினார். ஆனால் உலகத்தில் எந்தவொரு அரசியல்வாதியும் செய்யாத காரியத்தை சம்பந்தன் செய்தார் மாவையின் மகனுக்கு திருமணம் என்று கூறி, வாய்ப்பை வேண்டும் என்றே நழுவ விட்டார். அதன் பின்னர் இன்றுவரையில் புதுடில்லியிலிருந்து அவ்வாறானதொரு அழைப்பு வரவேயில்லை எனது பார்வையில் அவ்வாறானதொரு வாய்ப்பு வரப்போவதில்லை.

சம்பந்தன் வாழும் போது, அவர் ஆசைப்பட்டப்படியே, அவர் ஒரு போதுமே, சிங்கள மக்களை கோபப்படுத்தவில்லை தான். ஆனால் ஏதாவது நன்மை விளைந்ததா பதில் கூற எவரும் இல்லை.

மனோ கணேசன் சந்திப்பில் ஈடுபட்ட சிந்தனைக் கூடங்கள், இந்தியளவில் முக்கியமானவை. 2009இல் ஆரம்பிக்கப்பட்ட (Vivekananda International Foundation) விவேகானந்தா இன்ரநேசனல் பவுண்டேசன் மிகவும் முக்கியமானது. ஏனெனில் இது பாரதிய ஜனதாக் கட்சிக்கு மிகவும் நெருக்கமானது. அதன் வெளிவிவகாரக் கொள்கைசார் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தக் கூடியது. தற்போது பிரதமர் மோடியின் நெருங்கிய சகாக்களில் ஒருவரும், தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான அஜித் குமார் டோவால் தான் இதனை நிறுவியவர்.

இதன் பணிப்பாளராக இயங்கிக் கொண்டிருக்கும் போதுதான், அவர் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இணைத்துக் கொள்ளப்பட்டார். தற்போது இதன் தலைவராக இருப்பவர் துக்களக் ஆசிரியர், ஆர்.எஸ்.எஸ் கருத்தியலாளராக அறியப்படும், சுவாமிநாதன் குருமூர்த்தி. விவேகானந்தா முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள இது போதுமானது. இதை உணர்ந்து தான் மிலிந்த மொறகொட, அவர்களோடு நெருங்கிய தொடர்புகளை பேணி வருகின்றார். புதுடில்லியில் எத்தனையோ சிந்தனைக் கூடங்கள் இருக்கின்ற போது, மொறகொட ஏன் இதனை மட்டும், தெரிவு செய்து நட்பாயிருக்கிறார்? ஒரு வேளை நாளை, தான் ஜனாதிபதியாக வர முயற்சித்தால், பாரதிய-ஜனதா இந்தியாவின் ஆசீர்வாதத்தை, தனதாக்கிக் கொள்வதற்கு இவ்வாறான தொடர்புகள் அவசியமல்லவா — அதற்காக.

மலையக மக்களை பிரதிநித்துவம் செய்யும் மனோகணேசன் புதுடில்லயின் சிந்தனைக் கூடங்களில் சந்திப்புக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறி வரும், அரசியல்வாதிகளோ, தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜோசப் விஜயுடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலரோ, கர்நாடகா அரசியல்வாதிகளுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களோ, அருகிலுள்ள தமிழ் நாட்டிற்கே தண்ணீர் கொடுக்க முடியாதென்று சண்டைபோடுபவர்கள். இந்திய மத்திய அரசினாலேயே செய்ய முடியாத காரியங்களை, மானில அரசியல்வாதிகளிடம் கேட்குமளவிற்குத் தான், ஈழத் தமிழரின் அரசியல் மூளை வளர்ச்சியடைந்திருக்கின்றது.

வீன ராஜதந்திர அரசியலில், சிந்தனைக் கூடங்களின் (think tanks) பங்கு வலுவானது அதிலும் இந்தியா போன்ற (bureaucratic influence) அதிகாரப் பிரிவினர் வெளிவிவகாரக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் இடங்களில், பல்வேறு சிந்தனைக் கூடங்களில் இருப்பவர்கள்தான் ஆட்சிகள் மாறுகின்ற போது, உயர் வெளிவிவகாரப் பொறுப்புக்களில் நியமிக்கப்படுகின்றனர். இது மாறி, மாறி நிகழ்கின்றது. அமெரிக்காவின் முன்னணி சிந்தனைக் கூடங்களில் இருப்பவர்கள் தான் கொள்கைசார் பதவிகளுக்கு வருகின்றனர். அது ஆட்சியின் தன்மைக்கும், அவர்கள் அந்தக் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கும் அமைவாக அமைகின்றது.

**கட்டுரையாளர்:**
**தாயகத்தில் இருந்து**
**- யசீந்திரா -**



நமது சூழலுக்கும் சிந்தனைக் கூடத்திற்கும் எட்டாப் பொருத்தம் ஆகக் குறைந்தது அது பற்றி விழிப்புணர்வு கூட அரசியலில் இருப்பவர்களிடம் இல்லை. தமிழ்ச் சூ மலிலிருந்து, ஒரு மூலோபாய சிந்தனைக் கூடத்தை உருவாக்க வேண்டும் என்று முயற்சித்தேன். தமிழர் வரலாற்றியேயே அவ்வாறானதொரு சிந்தனைக் கூடத்தை முதல் முதலாக, உருவாக்கியது நானந்தான். இதன் மூலம் ஒரு சிந்தனைக் கூட அறிவுப்பாரம்பரியத்தை ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சித்தேன். இந்தப் பின்புலத்தில் நான் உருவாக்கியதுதான் மூலோபாய கற்கைகளுக்கான திருகோணமலை நிலையம். ஆனாலும் அந்த முயற்சியில், இன்றுவரையில் முன்னோக்கி நகர முடியவில்லை காரணம் எமது அறிவாளர் சமூகத்தின் பரிதாப நிலைமையும், கோயில்களை கட்டுவது தான், கொடையென்று எண்ணும் புலம்பெயர் சமூகத்தின் அறியாமையும்.

நூறு பேருக்கு
உணவளிக்க முடியாவிட்டால்...
ஒருவருக்கு மட்டும்
உணவளிக்கவும்...!
- புனித அன்னை தெரசா



# அமெரிக்கா படையெடுத்தால் அதை எதிர் கொள்ள கனடா எவ்வாறு தயாராகிறது?

அமெரிக்கப் படையெடுப்பு போன்ற கற்பனை செய்து பார்க்கவே கடினமான ஒரு சூழலுக்கும் தான் தயாராக இருப்பதாக கனடா பிரதமர் மார்க் கார்னி கடந்த வாரம் தெரிவித்தார். டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபராக இருக்கும் நிலையில், அமெரிக்கா—கனடா இடையிலான



உறவு மறுவரையறை செய்யப்பட்டு வருவதால் அனைத்து சாத்தியக் கூறுகளையும் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பு தனக்கு இருப்பதாக 'நியூ யார்க் டைம்ஸ்' நாளிதழிடம் அவர் கூறினார். அதேவேளை, அமெரிக்கா கனடா மீது படையெடுப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்றும், அத்தகைய சூழல் ஏற்படுவது அசாத்தியமானது என்றும் அவர் குறிப்பிட்டார். இது வெறும் ஆபத்து மேலாண்மை மட்டுமே' என்று கார்னி கூறினார்.

டிரம்பின் உலகளாவிய வரி விதிப்புகள் மற்றும் கனடாவை அமெரிக்காவின் 51வது மாகாணமாக மாற்ற வேண்டும் என்ற அவரது விருப்பம் குறித்து அவர் அடிக்கடி வெளியிடும் கருத்துகள் ஆகியவை, அமெரிக்காவிடம் இருந்து சாத்தியமான தாக்குதலை எதிர் கொள்வதற்காக கனடா தனது பாதுகாப்புத் தயார்நிலையை அதிகரிக்க வேண்டிய சூழலை ஏற்படுத்தியுள்ளன.

கனடாவுக்கு எதிராக அமெரிக்கா படைப் பலத்தைப் பயன்படுத்த வாய்ப்பில்லை என்று அமெரிக்க அதிபர் கூறியுள்ளார். அதற்குப் பதிலாக தனது அரசியல் இலக்குகளை அடைவதற்காக கனடா மீது பொருளாதார அழுத்தத்தைத் தொடர்ந்து செலுத்துவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கனடாவின் சிறந்த மக்களைப் பாதுகாப்பதற்காக அதிபர் டிரம்பை விட வேறு எவரும் அதிக முயற்சி செய்ததில்லை' என்று வெள்ளை மாளிகை இந்த வாரம் பிபிசி செய்தி நிறுவனத்துக்கு அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புத் துறையில் இரு நாடுகளும் இணைந்து செயல்படக் கூடிய பல்வேறு வழிகளைச் சுட்டிக் காட்டிய ராணுவ வல்லுநர்களும், அமெரிக்கா கனடா மீது படையெடுப்பது என்பது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்று என்றே பிபிசியிடம் தெரிவித்துள்ளனர். ஆனால் இந்த விவகாரம் கனடா மக்களின் மனதில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

கடந்த ஜனவரி மாதம் வெனிசுவேலா அதிபர் நிகோலஸ் மதுரோவை அமெரிக்கா கைது செய்ததைத் தொடர்ந்து, 30 சதவீதத்துக்கும் அதிகமான கனடியர்கள் அமெரிக்கப் படையெடுப்பு நிகழ வாய்ப்புள்ளதாக நம்புவதாக 'லெஜர்' கருத்துக்கணிப்பு தெரிவித்துள்ளது.

### அமெரிக்கப் படையெடுப்பு ஏன் நடக்க வாய்ப்பில்லை?

கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போர் ஏற்படுவது மிகவும் சிக்கலானதும், கற்பனை செய்து பார்ப்பதற்கே கடினமானதுமாக இருக்கும் என்று ராயல் கனடியன் விமானப்படையின் முன்னாள் அதிகாரியும், 34 ஆண்டுகள் பல்வேறு உயர் பதவிகளில் பணியாற்றியவருமான லெப்டினன்ட் ஜெனரல் கிறிஸ்டோபர் கோட்ஸ் கூறினார்.

எனது ஒட்டுமொத்தப் பணிக்காலத்திலும் நான் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளேன். ஆனால், அமெரிக்க நிலப்பரப்பில் இருந்து கனடாவுக்கு இராணுவத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற சாத்தியக் கூறை நாங்கள் ஒருபோதும் பரிசீலித்ததே இல்லை' என்று அவர் பிபிசியிடம் கூறினார்.

நேட்டோ பணிகளில் பணியாற்றிய அனுபவம் கொண்ட கோட்ஸ், இராணுவப் பாதுகாப்பின் பல்வேறு அம்சங்களில் கனடாவும் அமெரிக்காவும் நெருக்கமாக இணைந்து செயல்பட்டு வருவதைச் சுட்டிக் காட்டினார்.

இரு நாடுகளும் 'வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு' எனப்படும் நேட்டோவின் உறுப்பு நாடுகளாக உள்ளன. அதன் விதிகளின்படி, ஓர் உறுப்பு நாடு தாக்குதலுக்கு உள்ளாகும் போது, மற்ற உறுப்பு நாடுகள் அதற்கு ஆதரவாக பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இரு நாடுகளும் 'வட அமெரிக்க வான்வழிப் பாதுகாப்புக் கட்டளை' அமைப்பின் கீழ் இணைந்து ஆர்க்டிக் பிராந்தியப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதுடன், உளவுத் தகவல்களையும் பகிர்ந்து கொள்கின்றன.

இதன் காரணமாக, கனடா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் சூழல் ஏற்பட்டால், அது நேரடியான ஆயுதத் தாக்குதலாகத் தொடங்க வாய்ப்பில்லை என்றும், அதற்குப் பதிலாக இணையவழிப் போர் போன்ற மறைமுகமான வழி முறைகளில் தொடங்கக் கூடும் என்றும் தான் கருதுவதாக கோட்ஸ் தெரிவித்தார்.

### அமெரிக்கப் படையெடுப்பு எவ்வாறு அமையும்?

அமெரிக்கப் படையெடுப்பு நிகழ்வதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவு என்றாலும், கனடா அதற்குத் தயாராகி வருவது, உலக ஒழுங்கு எந்த அளவுக்குத் தீவிரமாக மாறியுள்ளது என்பதற்கான ஓர் அறிகுறி என்று கனெக்டிகட்டில் உள்ள நியூஹேவன் பல்கலைக்கழகத்தின் தேசியப் பாதுகாப்புத் துறை இணைப் பேராசிரியர் மேத்யூஷ்மிட் கூறினார்.

அமெரிக்க ராணுவத்துடன் எந்த அளவுக்கு நெருக்கமாகத் தொடர்ந்து பணியாற்றுவது என்பது குறித்து கனடியத் தலைவர்கள் கடினமான கேள்விகளை எழுப்ப வேண்டியிருப்பதாகவும் அவர் கூறினார். ஒருவேளை அமெரிக்கா கனடாவுக்கு ஏதேனும் வகையில் தீங்கு விளைவிக்க நினைத்தால், இரு நாடுகளுக்கும் இடையிலான இந்தக் கூட்டாண்மை அமெரிக்காவுக்கு மதிப்புமிக்க தகவல்களை வழங்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது அமெரிக்காவுடனான உறவுகளுக்கு உண்மையிலேயே பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இதில் ஓரளவுக்கு நியாயமான அச்சமும் நிலவுகிறது' என்று அவர் கூறினார்.

கனடாவை அமெரிக்காவின் 51வது மாகாணமாக மாற்றுவது குறித்த டிரம்பின் கருத்துகளை அமெரிக்கர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், கனடியர்கள் அவற்றைத் தீவிரமாக எடுத்துக் கொள்கிறார்கள் என்றும், தேவைப்பட்டால் தங்களைத் தற்காத்துக் கொள்ளவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றும் ஷ்மிட் கூறினார்.

### ஒருவேளை அத்தகைய சூழல் ஏற்பட்டால் எப்படி இருக்கும்?

போரின் முதல் கட்டம் மிகவும் குறுகியதாக இருக்கலாம். இந்த ஆண்டின் தொடக்கத்தில் 'குளோப் அண்ட் மெயில்' நாளிதழ் வெளியிட்ட செய்தியின்படி, கனடிய இராணுவம் பயன்படுத்திய ஒரு மாதிரித் திட்டத்தின் அடிப்படையில், அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் கனடாவின் முக்கிய இராணுவ நிலைகள் ஒரே வாரத்துக்குள் நிலைகுலையக்கூடும்.

கனடாவின் ராணுவப் பலம் விரைவாக வீழ்த்தப்படக்கூடும். இதனால், எதிரிப் படைகளை எதிர்கொள்ள கனடியப் படைகள் கொரில்லா பாணியிலான போர் முறையைக் கையாள வேண்டிய நிலை ஏற்படலாம்.

கனடாவுக்கு ஆதரவும் பாதுகாப்பும் வழங்குமாறு பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட நட்பு நாடுகளிடம் உதவி கோரப்படலாம் என்று மூத்த அரசாங்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி அந்த நாளிதழ் ஜனவரியில் செய்தி வெளியிட்டது.

ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, அமெரிக்கத் தாக்குதல் நிகழும் சாத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு கனடா திட்டமிட்டிருப்பது இதுவே முதல் முறை என்று நம்பப்படுகிறது. எனினும், இந்த மாதிரித் திட்டமிடல் என்பது ராணுவப் போர் திட்டமிடலில் மிகவும் ஆரம்பகட்ட நிலையிலேயே இருப்பதாக கோட்ஸ் கூறினார்.

தனது நேட்டோ கூட்டாளிகளைப் போலல்லாமல், எந்தவொரு தரைவழிப் படையெடுப்பையும் எதிர் கொள்வதற்கான பதிலடித் திட்டத்தை உருவாக்குவதில் கனடா பின்தங்கியிருப்பதாக அவர் கூறினார். கணிக்க முடியாத புவிசார் அரசியல் சூழல் நிலவும் நிலையில், அந்தக் குறையை ஈடு செய்ய கனடா தற்போது முயன்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கனடாவின் பாதுகாப்புத் துறைத் தலைவர் சமீபத்தில் விடுத்த அழைப்பும் இதைத் தெளிவுபடுத்துவதாக அவர் கூறினார். குறைந்த அளவு பயிற்சி பெற்ற 3 லட்சம் வரையிலான குடிமக்கள் வீரர்களைச் சேர்ப்பதும் அந்தத் திட்டத்தில் இடம்பெறுகிறது.

அமெரிக்காவின் கண்ணோட்டத்தில் பார்த்தாலும், கனடா மீதான படையெடுப்பு அவ்வளவு எளிதானதாக இருக்காது.

அமெரிக்காவிடம் மிகப்பெரிய இராணுவப் பலம் இருந்தாலும், கனடாவுடனான போருக்கு பொதுமக்களின் ஆதரவைப் பெறுவது அமெரிக்காவுக்கு கடினமாக இருக்கும் என்று ஷ்மிட் கூறினார். கனடா மீது படையெடுக்குமாறு உத்தரவிடப்பட்டால், பெருமளவிலான அமெரிக்க ராணுவ அதிகாரிகள் பதவி விலகுவார்கள் என்று நான் நினைக்கிறேன்' என்றார் அவர். அவர்கள் அதை சட்ட விரோதமானதும், ஒழுக்கநெறிக்கு முரணானதுமான உத்தரவாகவே கருதுவார்கள்.'

கனடிய மற்றும் அமெரிக்க வீரர்கள் வழக்கமாக ஒன்றாகப் பயிற்சி பெறுவதுடன், ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதையையும் கொண்டிருப்பதாக ஷ்மிட் கூறினார்.

ஆனால், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் போர் மூளும் அளவுக்கு மோசமடைந்தால், கனடாவின் எண்ணெய் மற்றும் கனிமங்கள் போன்ற மதிப்புமிக்க வளங்களைக் கைப்பற்றுவதிலும், அந்நாட்டின் அரசியல் தலைமையை வீழ்த்துவதிலும் அமெரிக்கா கவனம் செலுத்தக் கூடும் என்று அவர் கூறினார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் வெனிசுவேலாவின் முன்னாள் அதிபர் நிகோலஸ் மதுரோவை கைது செய்ய அமெரிக்க ராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையைச் சுட்டிக்காட்டிய அவர், 'வெனிசுவேலாவில் நீங்கள் கண்டதைப் போன்ற ஒரு நடவடிக்கையை அநேகமாக இங்கும் காண்பீர்கள்' என்றார். அமெரிக்காவிடம் அதிக இராணுவத் திறன் இருப்பதை ஒப்புக்கொண்டாலும், திறமைக்கு திறமை என்ற அடிப்படையில் பார்த்தால், கனடிய வீரர்களால் கடுமையான எதிர்ப்பை வழங்கிப் போராட முடியும் என்றும் ஷ்மிட் கூறினார்.

# நெற்பிளக்சில் ஓர் ஈழத்தமிழ் நடிகை:- டிஜிட்டல் இனவாதம்?



மைத்திரேயி ராமகிருஷ்ணன் எந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்கக் கூடாது என்று சிங்களக் கடும் போக்காளர்கள் கருதினார்களோ, அதை அவர்களே முன்னரே விட அதிகமாகப் பிரபல்யப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் கொந்தளிக்கும் அளவுக்கு மைத்திரேயி என்ன சொன்னார்?

நெற்பிளிக்ஸில் அவருடைய புதிய படம் வெளிவந்த பின் அவர் வழங்கிய ஒரு நேர்காணலில் நான் ஒரு ஸ்ரீலங்கன் அல்ல. நான் ஓர் ஈழத் தமிழ்ப் பெண். நான் யாராக இருக்கிறேனோ அதை-ஒரு தமிழீழப் பெண்ணாக இருப்பதை நேசிக்கிறேன்.... நான் நினைக்கிறேன், எனது தொழில் முன்னெடுப்புக்களுக்கு ஊடாக நான் எனது அடையாளத்தை மேலும் நேசிப்பதற்கு மட்டும் கற்றுக் கொண்டேன் என்று சொன்னார். இது சிங்கள இணையத் தளவாசிகளில் கடும் போக்காளர்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தியது. அவர்கள் இரண்டு விடயங்களைச் செய்தார்கள். ஒன்று, மைத்திரேயிக்கு எதிராக வன்மத்தைக் கக்கினார்கள். அதோடு அவர் கடைசியாக வெளியிட்ட திரைப்படத்தின் இணைய மதிப்பீட்டைக் குறைக்கும் விதத்தில் திட்டமிட்டு உழைத்தார்கள்.

ஆனால் அவர்கள் எதைத் தடுக்க நினைத்தார்களோ, எது பரவலாகக் கூடாது என்று நினைத்தார்களோ அதை அவர்களே பரவலாக்கியிருக்கிறார்கள் வைரல் ஆக்கியிருக்கிறார்கள். அதனால் மைத்திரேயியை முன்னரை விட அதிக அளவு பிரபல்யப்படுத்தி இருக்கிறார்கள். அவருடைய படத்திற்கான இணைய மதிப்பீடு அதிகரித்திருக்கிறது.

அதற்கு என்ன காரணம் ? அவருக்கு எதிராக சிங்களக் கடும்போக்குவாதிகள் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் இணைய உலாவிகளைக் கோபப்படுத்தி இருக்கலாம். அதனால் அவர்கள் ஒன்றுதிரண்டு, நிறுவனமயப்பட்டு மைத்திரேயியின் புதிய படத்திற்கான இணைய மதிப்பீட்டைக் கூட்டும் விதத்தில் திட்டமிட்டுச் செயற்பட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு செயல்படுவதற்குத் தேவையான மையப்படுத்தப்பட்ட கட்டமைப்பு ஏதாவது தமிழ் மக்களிடம் குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்களிடம் உண்டா? அப்படி இல்லையென்றால், அது வழமையான இணையதளப் பண்பின் ஊடாக கிடைத்த ஒரு விளைவு எனலாமா?

வழமையான இணைய ஊடகப் பண்பு எனப்படுவது பெரும்பாலும் நெகட்டிவ் ஆனதை வைரல் ஆக்குவது தான். எது அதிகம் சர்ச்சைக்குரியதாக இருக்கிறதோ, எது அதிகம் முரணானதாக அல்லது நெக்கடிவ் ஆனதாக இருக்கிறதோ அது வேகமாக வைரல் ஆகிறது.

நல்லவை நியாயமானவை அல்லது மகத்தானவை வைரல் ஆவதை விடவும் எதிர்மறைப் பண்புடையவை விரைவாக வைரல் ஆகின்றன. அது ஒருவகை எதிர்மறைக் கவர்ச்சி. இந்தக் கவர்ச்சி காரணமாகத் தான் பங்களாதேஷில் ஓர் எருமை வைரல் ஆகியது. அது அமெரிக்க ஜனாதிபதி ரம்பின் தலைமுடியை ஞாபகப்படுத்தும் தலை முடியைக் கொண்டிருந்த காரணத்தால் வைரல் ஆகியது. அப்படித் தான் இந்தியாவிலும் வேலையற்ற இளையோரை நோக்கி தலைமை நீதிபதி கரப்பான் பூச்சிகள் என்று சொல்லப் போய் அந்த நெகட்டிவ்வான குறிப்பு வைரல் ஆகியது. பின்னர் அது கட்சியாகியது. முடிவில் அது ஒரு போராட்ட சக்தியாகவும் எழுச்சி பெற்றது.

அப்படித் தான் கரூரில் விஜயின் கூட்டத்தில் நிகழ்ந்த மரணங்கள் அவருடைய தேர்தல் வெற்றிகளைப் பாதிக்கலாம் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஏறக்குறைய விஜயின் பக்தர்களாகவே மாறி விட்ட ரசிகர்கள் மத்தியில் அது விஜய் மீதான இரக்கத்தையும் அனுதாபத்தையும் தூண்டியது.

எங்கள் ஊரிலும் சுமந்திரன் அவ்வாறான எதிர்மறைக் கவர்ச்சியை அனுபவிக்கும், ரசிக்கும் ஓர் அரசியல்வாதி தான். ஆனால் அவருக்கு அவருடைய எதிர்மறைக் கவர்ச்சி வாக்குத் திரட்சியாக மாறவில்லை. இப்படிப்பட்டதோர் இணைய வெளி யதார்த்தத்தில், மைத்ரேயிக்கு எதிரான சிங்கள இணைய உலாவிகளின் வன்மம் அவர் மீதான கவர்ச்சியைக் கூட்டியிருக்கிறது. மூக்குத்தி அணிந்த அழகிய இளம் நடிகை.தனது கலைத் தாகத்தால் கல்வியை ஒத்தி வைத்தவர். மேற்கத்திய ஆங்கில அசைவுகளோடு, தடித்த சன்னமான குரலில் அழுத்தமாக கதைக்கிறார்.

அவர் தமிழிச்சியா இல்லையா அல்லது ஆணா பெண்ணா என்பவை இங்கு முக்கியமல்ல. ஒரு வளர்ந்த நபர். 24 வயதுடையவர், பிரபல்யமானவர், தன்னை உலகம் எப்படி அழைக்க வேண்டும் என்பதனை தீர்மானிப்பதற்கு தேவையான உரிமையை கொண்டிருக்கிறார். அவர் தன்னை ஸ்ரீலங்கன் என்று அழைக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அவர் ஏன் தன்னை அவ்வாறு அழைக்கவில்லை என்று கேள்விக்கு விடை காண வேண்டும். சில வார்த்தைகள் ஏன் தங்களை ஆவேசப்படுத்துகின்றன என்பதற்கு அவர்கள் விடை கண்டு பிடிக்க வேண்டும்.

அது ஒரு பண்பாட்டு அடையாளம் அல்லது புலப்பெயர்ச்சியின் அடையாளம் என்று கூறலாம். ஈழத் தமிழ்ப் புலப்பெயர்ச்சி எனப்படுவது அரசியல் காரணங்களால் நிர்ப்பந்திக்கப்பட்டது. எனவே அது முழுக்க முழுக்க அரசியல் அடையாளம் தான். ஒரு 24 வயதுப் பெண் தனது அரசியல் அடையாளம் எது என்பதை அவ்வாறு தீர்மானிப்பதற்கான காரணம் எங்கிருந்து வருகிறது என்பதனை அதை எதிர்ப்பவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.அந்த அடையாளப் படுத்தல் ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் இருந்தது. ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரும் இருந்து வருகிறது என்பதனை அவர்கள் ஆழமாக ஆராய வேண்டும்.

மைத்திரேயி தன்னுடைய அரசியல் அடையாளத்தை அவ்வாறு தீர்மானகரமாகக் கூறியதை வைத்து அவரைத் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தோடு தொடர்புபடுத்தி வெறுப்பைக் கொட்டும் போது அது அவரை நோக்கி மற்றவர்களின் கவனத்தைக் குவிக்கிறது.இதனால் மைத்திரேயி ஆங்கில இணையப் பரப்பில் முன்னரை விட அதிகம் பிரபல்யமாகயிருக்கிறார். தமிழ் இணைய வெளியில் முன்பு அறிமுகம் இல்லாதவர்களுக்கும் தெரிய வந்திருக்கிறார்.

அவரை ஒன்று திரண்டு எதிர்த்தவர்கள் எதைத் தடுக்க நினைத்தார்களோ, அது வெளியே வந்துவிட்டது. அது மேலே வந்து விட்டது. அது மட்டுமல்ல, அது இன்னொரு விளைவையும் ஏற்படுத்தியிருக்கிறது.

மைத்திரேயிக்குக் கிடைத்த பிரபல்யம் என்பது அவரை எதிர்த்த சிங்களக் கடும்போக்கு வாதிகளுக்கு எதிரான அபகீர்த்தையும் தான். அதாவது அவருக்கு எதிரான பால் ரீதியான, மொழி ரீதியான,இன ரீதியான,குறிப்பாக அரசியல் ரீதியிலான தாக்குதல்கள் இனவாதத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றன. அசோக ஹந்தகம போன்ற மதிப்புக்குரிய திரைக் கலைஞர்கள் மைத்திரேயியை ஆதரித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பெரும்பான்மைக்குள் காணப்படும் சிறுபான்மைகள்.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



இப்போதுள்ள அரசாங்கம் நாட்டில் இனவாதம் இல்லை என்று கூறுகிறது. ஏனென்றால் தமிழ்மக்கள் தனக்கு வாக்களித்தபடியால் தமிழ் மக்களின் ஆணை தனக்கும் உண்டு என்றபடியால் நாட்டில் இப்பொழுது இனவாதம் இல்லை என்று இந்த அரசாங்கத்தால் கூற முடிகிறது. ஆனால் இணைய வெளி யதார்த்தம் அதுவல்ல.

டிஜிட்டல் வெளியில் டிஜிட்டல் இனவாதம் அதன் வேடமில்லாத முகத்தோடு வெளிவருகிறது.

அண்மைக் காலங்களாக குறிப்பாக தேசிய மக்கள்சக்தி அரசாங்கத்தின் வருகைக்குப் பின்,சிங்கள இணைய உலாவிகள் மத்தியில் இந்தப் போக்கு அதிகரித்து வருகிறது. இது ஒரு திட்டமிட்ட செயற்பாடு என்று தமிழர்கள் நம்புகிறார்கள். யாரோ இதனை ஒருங்கிணைத்துச் செய்கிறார்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் அது சிங்கள இணைய உலாவிகளின் நிறுவன மயப்பட்ட செயற்பாடா? அல்லது ஏற்கனவே நிறுவனமயப்பட்டுள்ள ஒரு கூட்டு உளவியலின் வெளிப்பாடா?

நாட்டில் இனவாதத்தை வைத்து அரசியல் செய்ய இனியும் முடியாது என்று அரசாங்கம் கூறுகிறது. ஆனால் டிஜிட்டல் இனவாதம் முன்னெப்பொழுதையும் விட விகாரமான அசிங்கமான முகத்தோடு மேலெழுகின்றது. மைத்திரேயியின் விவகாரம் அதனை மேலும் அம்பலப்படுத்தியிருக்கிறது. ஐநாவின் நல்லிணக்க முயற்சிகள் பொறுப்புக் கூறலுக்கான தீர்மானங்கள் போன்றன நாட்டில் தோல்வியடைந்து விட்டன என்பதை அது அம்பலப்படுத்துகிறதா? மைத்ரேயியை எதிர்த்தவர்கள் அவரைப் பிரபல்யப் படுத்தி விட்டார்கள். அவருக்குள்ள கவர்ச்சியை அதிகப்படுத்தி விட்டார்கள். அதைவிட முக்கியமாக தங்களைத் தாங்களே அம்பலப்படுத்தி விட்டார்கள்.



# 500 மரண தண்டனையை நேரில் பார்த்துள்ள நான் இப்படியொரு சம்பவத்தை பார்த்ததில்லை

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் நடைபெற்ற சுமார் 500 மரண தண்டனைகளை செய்தியாளராக மைக்கேல் கிராசிக் நேரில் பதிவு செய்துள்ளார். 2018ஆம் ஆண்டு அசோசியேட்டட் பிரஸ்ஸில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும், அவர் மரண தண்டனைகள் குறித்த செய்திகளைத் தொடர்ந்து பதிவு செய்து வந்தார்.



மரண தண்டனை நிறைவேற்றும் போது ஊசி வெளியே வந்த இரண்டு சம்பவங்களை அவர் நினைவுகூர்கிறார். பின்னர் ஊசி மீண்டும் செலுத்தப்பட்டு, மரண தண்டனை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. ஆனால் மரண தண்டனைக்குப் பிறகும் கைதி உயிருடன் இருந்த சம்பவத்தை அவர் இதுவரை பார்த்ததில்லை.

ஆனால், கடந்த வாரம் அமெரிக்காவின் டென்னஸி மாகாணத்தில் அப்படியொரு சம்பவம் நடந்தது. 50 வயதான கைதி கிறிஸ்டா பைக், மரண தண்டனைக்குப் பயன்படுத்தப்படும் பென்டோபார்பிட்டல் என்ற மருந்தின் இரண்டு தனித்தனி அளவுகள் செலுத்தப்பட்ட பிறகும் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தார். அவர் குறட்டை விடும் சத்தமும் கேட்டது

76 வயதான கிராசிக், இந்த அசாதாரண சம்பவம் குறித்து கேள்விப்பட்டபோது முழுமையாக ஆச்சரியப்படவில்லை என்கிறார். டெக்சாஸ் செய்தியாளராக பல தசாப்தங்கள் பணியாற்றிய போதே இதுபோன்ற ஒன்று நடக்கக் கூடும் என்ற சாத்தியம் குறித்து அவர் யோசித்திருந்தார். இது நடப்பதற்கு ஒரு கட்டத்தில் வாய்ப்பு வரும் என்றுதான் எனக்குத் தோன்றியது,' என்று அவர் தெரிவித் தார்.

அசோசியேட்டட் பிரஸ் தகவலின்படி, டென்னஸி மாகாணத்தின் மரண தண்டனை நடைமுறையில், முதல் தொகுப்பு மருந்தை செலுத்திய பிறகும் கைதி உயிரிழக்கவில்லை என்றால் பயன்படுத்துவதற்காக, பென்டோபார்பிட்டல் நிரப்பப்பட்ட இரண்டாவது தொகுப்பு ஊசிகளும் தயாராக வைக்கப்படும். ஆனால், இரண்டாவது தொகுப்பையும் செலுத்திய பிறகும் கைதி உயிருடன் இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து அந்த நடைமுறையில் குறிப்பிடப்படவில்லை.

புதன்கிழமை இரவு நடந்த இந்தத் தோல்விக்குப் பிறகு, மாகாண ஆளுநர் பில் லீ, டென்னஸியில் மரண தண்டனைகளை நிறுத்தி வைத்ததுடன், நடைமுறைகள் குறித்து சுயாதீனமான ஆய்வு நடத்தவும் உத்தரவிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் மரண தண்டனையை முறையாக நிறைவேற்ற முடியாத சம்பவங்கள் அதிக கவனத்துக்கு வந்துள்ளன. மரண தண்டனைக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து, சில மாகாணங்கள் மருந்துகளின் கலவையை மாற்றின அல்லது நம்பகத்தன்மை குறித்த கேள்விகள் எழுந்த நிறுவனங்களிடம் இருந்து மருந்துகளைப் பெற்றன. சில மாகாணங்கள் மாற்று முறையாக துப்பாக்கிச் சூடு மூலம் மரண தண்டனையை நிறைவேற்றும் முறையைக் கூட மீண்டும் கொண்டு வந்தன.

கிறிஸ்டா பைக் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு உயிரைக் காக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

மரண ஊசி செலுத்துவது என்பது, மரண தண்டனை சட்டப்பூர்வமாக உள்ள அமெரிக்காவின் 27 மாகாணங்களில் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் முறையாகும். இந்த முறையில் மரண தண்டனையை முறையாக நிறைவேற்ற முடியாமல் போவது வழக்கத்திற்கு மாறான ஒன்றல்ல. மரண தண்டனைக்கு ஆதரவாகவோ எதிராகவோ நிலைப்பாடு எடுக்காத ஆய்வு அமைப்பான `மரண தண்டனைத் தகவல் மையம்', முறையாக நிறைவேற்றப்படாத மரண தண்டனை என்பதை, `எதிர்பாராத பிரச்னைகள் அல்லது தாமதங்களால் கைதிக்கு தேவையற்ற வேதனை ஏற்பட்டதாகக் கருதக்கூடிய நிலை அல்லது மரண தண்டனையை நிறைவேற்றியவரின் மிக மோசமான திறமையின்மையை வெளிப்படுத்தும் நிலை' என்று வரையறுக்கிறது.



1982 முதல் முறையாக நிறைவேற்றப்படாத 64 மரண தண்டனை சம்பவங்களை அந்த அமைப்பு பட்டியலிட்டுள்ளது. அவற்றில் 51 சம்பவங்கள் மரண ஊசி செலுத்தியவை. குறைந்தது ஏழு சம்பவங்களில், நரம்பு வழியாக மருந்தை செலுத்துவதற்கான ஐஏ குழாயை சரியாகப் பொருத்த முடியாததால், மரண தண்டனை நிறைவேற்றும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

ஆனால், மருந்து செலுத்தப்பட்ட பிறகு மரண தண்டனை நிறைவேறாமல் போன சம்பவத்தை கிராசிக் இதுவரை பார்த்ததில்லை. டெக்சாஸில் இது போன்று ஒருபோதும் நடந்ததில்லை,' என்று கிராசிக் கூறினார். அசோசியேட்டட் பிரஸ்ஸில் 46 ஆண்டுகள் பணியாற்றிய போது பல்வேறு விவகாரங்கள் குறித்து செய்தி சேகரித்த கிராசிக், மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதைத் தொடர்ந்து நேரில் பார்ப்பதைத் தனது பணியின் (18ம் பக்கம் பார்க்க)



# ஜே.வி.பி.யின் இரண்டாவது இந்தியப் பயணம்!

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பெலவத்தையில் இருந்து இயக்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக விமர்சனம் செய்து வருகின்ற நிலையில், ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சர்வதேச இராஜதந்திரிகள் அடிக்கடி சந்திக்கின்ற ஒருவராக மாறியிருக்கிறார்.

அது மாத்திரமன்றி, வெளிநாடுகளுக்கான இராஜதந்திரப் பயணங்களையும் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார். தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கடந்த ஆண்டு அவர் சீனாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அதற்குப் பின்னர் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டார். கடந்த மாதம் அவர் மீண்டும் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். ரில்வின் சில்வா ஒரே ஆண்டில் இந்தியாவுக்கு இரண்டு முறை அழைக்கப்பட்டது, சாதாரணமான விடயம் அல்ல. பெப்ரவரி மாதம் அவர் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம், இந்தியாவின் கலாசார உறவுகளுக்கான சபையின் மூலமாக ஒழுங்கு செய்யப்பட்டது. அது இந்திய அரசாங்கத்தின் ஏற்பாட்டிலான பயணம்.

இப்போதைய பயணம் இந்தியாவில் ஆட்சியில் இருக்கின்ற பாரதிய ஜனதா கட்சியின் அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்ட பயணம். பா.ஜ.க.வை அறிந்து கொள்வோம் என்ற திட்டத்தின் கீழ் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த பயணத்தின் போது அவர், பா.ஜ.க.வின் நிர்வாக அமைப்புகளில் உள்ள தலைவர்களை அதிகம் சந்தித்திருக்கிறார். பா.ஜ.க. தன்னை எவ்வாறு வளர்த்துக் கொண்டது, எவ்வாறு அதிகாரத்தை கைப்பற்றியது, தக்க வைத்திருக்கிறது என்பதை மையப்படுத்திய சந்திப்புகள், நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலாவது பயணத்தின் போது, இந்தியா பற்றிய, அதன் நிலைப்பாடுகள் பற்றிய, நிகழ்ச்சி நிரல்கள் சந்திப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் இந்தியா ஏன் ரில்வின் சில்வாவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளரான அவரே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பின்னால் இருந்து இயக்குகிறார். இதனை தேசிய மக்கள் சக்தி அல்லது ரில்வின் சில்வா மறுத்தாலும் சரி, அது தான் உண்மை என நம்பப்படுகிறது. இராஜதந்திர மட்டங்களும் அதனை உறுதியாக நம்புகின்றன. அதனால் தான் இந்திய, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் தூதுவர்கள், அவரை அடிக்கடி சந்திக்கிறார்கள் .

இலங்கைக்கான ஐ.நா.வின் பிரதிநிதியும் கூட பெலவத்தைக்குச் சென்று அவரைச் சந்தித்திருக்கிறார். இது அவருக்கான இராஜதந்திர முக்கியத்துவத்தை குறிக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் அவர், மாகாண சபை தேர்தல்களை இந்த ஆண்டு நடத்துவதற்கு சாத்தியம் இல்லை என்றும், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி பேரிடர் நிவாரண பணிகளுக்காக செலவிடப்பட்டு விட்டதாகவும் கூறியிருந்தார்.

இது பெரும் சர்ச்சையாக மாறியது. அரசாங்கத்தில் இல்லாத ஒருவர், மாகாண சபை தேர்தல்களை எப்படி தீர்மானிக்க முடியும், அதற்கான நிதி இல்லை என்று கைவிரிக்க முடியும் எனக் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அரசாங்கம் அதனை மறுத்தது. அப்படி எதுவும் இல்லை, மாகாண சபை தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அப்படியே இருக்கிறது, பேரிடர் நிவாரணத்திற்காக வேறு நிதி செலவிடப்பட்டது என்றெல்லாம் கூறியது. ஆனால், ரில்வின்சில்வா கூறிய படி, மாகாண சபை தேர்தல் இந்த ஆண்டு நடத்தப்படாது என்பது தான் உண்மை. இந்த ஆண்டு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட போவதில்லை. அது ரில்வின் சில்வா எடுத்த முடிவு. அதனை அரசாங்கம் அப்படியே நடைமுறைப்படுத்துகிறது.



இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியாவுக்கு சென்று திரும்பிய பின்னர், ரில்வின் சில்வா, ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியில், பல முக்கியமான விடயங்களை கூறியிருந்தார். அதில் ஒன்று மாகாண சபை தேர்தல் தொடர்பாக இந்தியா அழுத்தம் கொடுக்கவில்லை என்பதாகும். அது பற்றி இந்திய பயணத்தின் போது பேசப்படவே இல்லை என அவர் கூறியிருந்தார். ரில்வின்சில்வாவிடம் மாகாண சபைத் தேர்தல் பற்றி பேசாமல் விட்டது இந்தியாவின் இராஜதந்திரம்.

ஆனால் கடந்த ஓகஸ்ட் மாதம், இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த போது, தமிழர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய அரசியலமைப்பு ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்தி, மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்துமாறு வலியுறுத்தியிருந்தார்.

இதிலிருந்து, ரில்வின் சில்வாவை, இலங்கை அரசின் மறைமுகஆட்சியாளராக அங்கீகரிக்கவில்லை என்று இந்தியா சூசகமாக சுட்டிக் காட்டியது. அத்துடன் ரில்வின் சில்வாவின் அந்த பயணத்தின் போது இந்தியா சர்ச்சைக்குரிய விடயங்களை பேசவில்லை.

முரண்பட்ட தரப்புகள் தங்களுக்குள் இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு முற்படுகின்ற போது, சர்ச்சைக்குரிய விடயங்களை அல்லது உடன்பாடு இல்லாத விடயங்களை பேசாமல் தவிர்த்துக் கொள்வது ஓர் இராஜதந்திரம்.

இந்தியாவை பொறுத்தவரையில் தற்போதைய ஆட்சியாளர்களான ஜே.வி.பி.யுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறதோ இல்லையோ நெருக்கமான தொடர்புகளையும் உறவுகளையும் வைத்துக் கொள்வதற்கு விரும்புகிறது.

ஜே.வி.பி. இந்திய எதிர்ப்பு வாதத்தின் ஊடாக வளர்ச்சி பெற்ற ஒரு கட்சி. அதனை தங்கள் வழிக்கு கொண்டு வர இந்தியா முனைகிறது. ரில்வின் சில்வா தனது முதலாவது இந்திய பயணத்திற்கு பின்னர் அளித்த செவ்வியில் நாங்கள் ஒரு போதும் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்ல, அப்போதைய ராஜீவ் காந்தி அரசாங்கத்தை மட்டுமே எதிர்த்தோம்'' எனக் கூறியிருந்தார். அவரது அந்தக் கருத்து அரசியல் வட்டாரங்களில் பேசுபொருளாக மாறியிருந்தது.

ஏனென்றால் அது உண்மையல்ல என்பது அனைவருக்கும் தெரியும். ஜே.வி.பி.யை நிறுவிய ரோஹண விஜே வீர, தனது கட்சி உறுப்பினர்களுக்கு ஆரம்ப காலத்தில் நடத்திய, ஐந்து வகுப்புகள் என்ற அரசியல் பாடத் திட்டத்தில், இரண்டாவது வகுப்பாக இருந்தது, இந்திய விரிவாக்கவாதம் என்ற தலைப்பு தான். இந்திய பொருட்கள் மற்றும் கலாசாரம் இலங்கையை ஆக்கிரமிப்பதாக கூறி, ஜே.வி.பி. தீவிர பிரசாரங்களை மேற்கொண்டு வந்தது.

மலையக தோட்டத் தொழிலாளர்களை, இந்தியாவின் நலன்களை இலங்கைக்குள் திணிக்கின்ற ஒரு கருவியாகவும் ஜே.வி.பி. விமர்சனம் செய்தது. இந்திய -இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக, இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியை முன்னெடுத்தது.

இவ்வளவுக்குப் பின்னரும், நாங்கள், அன்றைய ராஜீவ் காந்தி அரசாங்கத்துக்கு எதிரானவர்களே தவிர, இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்ல என முழு பூசணிக்காயை சோற்றில் புதைக்க முற்பட்டிருந்தார் ரில்வின் சில்வா.

ரில்வின் சில்வாவுடன் இந்தியா எப்படி சர்ச்சைக்குரிய விடயங்களை பேசாமல் தவிர்க்க முனைந்ததோ, அது போலவே சர்ச்சைக்குரிய விடயங்களை தவிர்த்து இந்தியாவுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள ரில்வின் சில்வாவும் முற்பட்டிருந்தார்.

அவர் தனது முதலாவது பயணத்தின் போது, முழுக்க முழுக்க இந்தியாவின் கலாசார உறவுகளுக்கான சபையே அவரது பயண நிகழ்ச்சி நிரலை தயாரித்தது. ஆனால், ரில்வின் சில்வாவின் விருப்பத்தையும் கேட்டது. அதற்மைய அவர் கேரளாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அப்போது கேரளாவில் கம்யூனிஸ்டுகள் ஆட்சியில் இருந்தார்கள். ஆனால் அடுத்த சில மாதங்களிலேயே கேரளாவில் கம்யூனிச ஆட்சி முடிவுக்கு வந்தது.

இப்பொழுது இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் கம்யூனிஸ்டுகள் ஆட்சியில் இல்லை. அவர்கள் தமது கடைசி கோட்டையான கேரளாவையும் இழந்து விட்டார்கள்.

ரில்வின் சில்வா தனது முதல் பயணத்தின் பின்னர், கேரளாவில் முன்மாதிரிகளைப் பின்பற்றுவதற்கு முற்பட்டிருந்தார்.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், அது முடிந்து போன கதை. இனி எங்கள் வழிக்கு வாருங்கள் என பா.ஜ.க. அவரை அழைத்திருக்கிறது.

தங்களின் வெற்றி மூலோபாயங்கள் மற்றும் வாய்ப்பாடுகளை ஜே.வி.பிக்கு கற்றுக் கொடுக்க முயன்ற பயணமாகவே இதனை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ரில்வின் சில்வா கடந்த ஆண்டு சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, இலங்கையில் நீண்ட காலத்துக்கு ஆட்சியில் இருப்பதற்கான உத்திகள் குறித்து கலந்துரையாடப்பட்டிருந்தது. ஜே.வி.பி எதிர்பார்க்கின்ற மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு, சீனாவிடம் இருந்து எதனை கற்றுக் கொள்ளலாம் என ஆராயப்பட்டது.

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



அந்தச் சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி. நினைத்தவாறு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு, 15 தொடக்கம் 20 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்க வேண்டும் என சீன கொள்கை வகுப்பாளர்கள் கூறியிருந்தார்கள்.

ஜே.வி.பி., சீனாவின் ஒரு கட்சி ஆட்சியை நிலைப்படுத்துவதற்கு முற்படுகிறது என்ற குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் தான், ரில்வின் சில்வாவுக்கு, இந்தியாவுக்கான இரண்டு பயண வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

இப்போது பா.ஜ.க, இந்தியாவில் நீண்ட காலம் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற சூழலில், அதன் வெற்றி வாய்ப்புகள் குறித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை கொடுத்திருக்கிறது.

பா.ஜ.க. ஜனநாயக ரீதியில் ஆட்சியை தக்க வைத்துக் கொள்வது எப்படி என்று கற்றுக் கொடுத்திருக்கிறதா என்று தெரியவில்லை.

ரில்வின் சில்வா தலைமையிலான ஜே.வி.பி, அந்த வழியில் எதையாவது கற்றுக் கொள்ள முற்படுகிறதா என்று தெரியவில்லை. ஏனென்றால் இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக ஆட்சிக்கு வந்து 12 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது.

இப்போது அந்தக் கட்சி தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்கு கையாளுகின்ற உத்திகள் குறித்து எதிர் கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, எதிர்க்கட்சிகளை குறிப்பாக மாநிலக் கட்சிகளை உடைத்து பிளவுபடுத்துவது அதன் முக்கியமான மூலோபாயமாகும்.

இந்தியா முழுவதும் பா.ஜ.க ஆட்சியை நிறுவுவதற்காக, பிராந்தியத் தலைவர்களை தோற்கடிப்பதும், மாநில கட்சிகளை சிதைப்பதும், அதன் உத்தியாக இருந்து வருகிறது.

மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி, தமிழகத்தில் ஸ்டாலின், கேரளத்தில் பினராயி விஜயன், டெல்லியில் அரவிந்த் கெஜ்ரிவால் போன்றவர்கள் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள் என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள (18ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அகலும். மன அமைதி பாதிக்கும் படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.




ரிஸபராசி அன்பர்களே! மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.




மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். வெளியூர் பயணங்கள் உண்டாகும். அதனால் நன்மையும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.




கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதானமாக பேசுவது நல்லது.




சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கை யாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன் னேற்றம் காண்பர்.




சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். சிறப்பான வாரமாகும்.




துலாம்ராசி அன்பர்களே! நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரி கட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருந்தால் நன்று




விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.






தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் இருந்து வந்த வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவகாரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்குகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.




மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## ஜே.வி.பி.யின் இரண்டாவது இந்தியப் பயணம்

(17ம் பக்கத் தொடர்ச்சி) அண்மையில் வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் மேற் கொள்ளப்பட்டபோது பெரும் எண்ணிக்கையான ( சுமார் 15 வீதம்) வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. அவ்வாறு நீக்கப்பட்டதன் மூலம், மாநிலக் கட்சிகளின் தலைவர்கள் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். வாக்காளர் பட்டியல் திருத்தம் பாஜகவின் ஒரு மோசடியான தந்திரம் என விமர்சிக்கப்படுகிறது. இதற்கு தலைமை தேர்தல்ஆணையராக இருக்கின்ற ஞானேஷ் குமார் துணை போயிருக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர் தன்னிச்சையாக இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதனால் அவரைப் பதவி விலகக் கோரி போராட்டங்களும் இடம்பெறுகின்றன. இவ்வாறான சூழலில் ரில்வின் சில்வாவுக்கு, இந்தப் பயணத்தின் போது பா.ஜ.க. எதனை கற்றுக் கொடுத்திருக்கிறது? நீண்டகாலம் அதிகாரத்தில் இருப்பதற்கான வழிகளை அது கற்றுக் கொடுத்திருக்கிறதா? அதிகாரத்தை தக்க வைப்பதற்கு, குறுக்கு வழிகளை அது கற்றுக் கொடுத்திருந்தால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இங்கு தன்னிச்சையான சர்வாதிகாரத்தனமான முறைகளில் அதிகாரத்தை நிலைப்படுத்துவதற்கே முற்படும்.

பா.ஜ.க. அதனை செய்வது சரியானால் இலங்கையில் ஜே.வி.பி. அதனை செய்வது எந்த வகையில் தவறானதாக கருதப்படும்? ஆக மொத்தத்தில், இலங்கையின் எதிர்காலம் ஒரு கட்சி ஆட்சி முறையா அல்லது நீடித்து நிலைத்திருக்கும் அதிகாரத்துவ ஆட்சி முறையா என்பதற்கிடையிலான போட்டியையே ரில்வின் சில்வாவின் இந்திய, சீன பயணங்கள் உருவாக்கியிருக்கின்றன.

## திலீபனின் அரசியலும் திலீபனை வைத்து அரசியலும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) எடுத்துக் காட்டு தற்போதைய முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற ஏற்பாடுகள். அத்துடன் பரந்த அடிப்படையிலான செயற்பாட்டுத் திட்டங்கள் மூலமே இதனை மக்களிடத்து கொண்டு செல்ல முடியும். குறிப்பாக திலீபனின் நினைவாக விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டிகள், இரத்தக்கொடை முகாம்கள், மரம் நடும் இயக்கச் செயற்பாடுகள், கற்றுச் சூழல் பேணும் செயற்பாடுகள், இளைஞர் யுவதிகளுக்கான உயர்கல்வி, தொழில் வழிகாட்டல் பயிலரங்குகள், ஊர்மட்டத்திலான வரலாற்றுக் காட்சிக்கூடங்கள்.மாணவர்களுக்கு இடையிலான போட்டிகள் ( பொதுஅறிவு, கவிதை,கட்டுரை,கலை,சதுரங்கம்.. இன்னபிற) போன்றவை.

இவ்வாறான செயற்திட்டங்களின் முன்னெடுப்புகளின் போது ஏற்பாட்டுக்குழு மிக அவதானமாக திட்டமிட வேண்டும். எவ்விடயமாயினும் நாட்டின் சட்டங்களைக் கவனத்திற் கொண்டே முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே ஏற்பாட்டாளர்களுக்கும் பங்கு பற்றுநர்களுக்கும் வாய்ப்பாக அமையும். வேகமல்ல விவேகமே செயற்றிட்டத்துக்கு வெற்றியைத் தரும். இலங்கையில் அரசாங்கங்கள் மாறினாலும் தமிழ் மக்கள் தொடர்பான அவர்களின் அடிப்படை அணுகுமுறைகளில் மாற்றமேற்படுவதில்லை என்பது மீண்டும் மீண்டும் நிறுவப்பட்டு வருகிறது.

தமது தேர்தல் வெற்றிக்காக திலீபனுக்குச் சிலை வைப்போம், மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவிப்போம், பார்வதி அம்மாளின் பெயரில் துறைமுகம் அமைப்போம் என்றவர்களின் முகப் பூச்சுகள் கரைந்து அவர்களின் உண்மை முகம் மக்களுக்குத் தெரியத் தொடங்கி விட்டன. அவர்கள் தொடர்பில் மட்டுமன்றி கடந்த காலத்தை மறக்க வேண்டும் என்று புதிதாக அறிவுரை கூறும் நம்மவர் தொடர்பாகவும் தமிழ் மக்கள் இந்நேரத்தில் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம்.

## 500 மரண தண்டனையை நேரில் பார்த்துள்ள...

(16ம் பக்கத் தொடர்ச்சி) முக்கியமான பகுதியாகக் கருதுகிறார். ஒரு தனிநபரின் உயிரைப் பறிக்கும் அதிகாரத்தைவிட, மாகாண அல்லது மத்திய அரசிடம் நம் மீது செலுத்தக்கூடிய வேறு எந்த உயர்ந்த அதிகாரமோ, சக்தியோ இல்லை,' என்று அவர் கூறினார். 1976 முதல் அமெரிக்காவில் 1,683 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக `மரண தண்டனைத் தகவல் மையம்,' தெரிவித்துள்ளது. அந்த ஆண்டில் தான் அமெரிக்க உச்சநீதிமன்றம் மரண தண்டனையை மீண்டும் அமல்படுத்தியது. அமெரிக்க மாகாணங்களிலேயே அதிகபட்சமாக டெக்சாஸ் 602 மரண தண்டனைகளை நிறைவேற்றியுள்ளது. 1982-ஆம் ஆண்டு மரண ஊசி மூலம் மரண தண்டனையை நிறைவேற்றிய முதல் மாகாணமாகவும் டெக்சாஸ் ஆனது.

ஒரு வழக்கில் எந்தவித தனிப்பட்ட தொடர்பும் இல்லாத ஒருவர் அங்கு இருந்து, சட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதை நேரில் பார்ப்பது முக்கியம் என்று நான் எப்போதும் நினைத்தேன். அது முறையாக நிறைவேற்றப்படுகிறதா என்பதையும் உறுதி செய்ய வேண்டும்,' என்று கிராசிக் கூறினார். யாராவது ஒருவர் அதை நேரில் பார்த்து, மற்றவர்களிடம், `நான் இதைத்தான் பார்த்தேன். இதுதான் நடந்தது' என்று சொல்ல வேண்டும்.'

இன்று டென்னஸியில் உள்ள கைதி பற்றித்தான் அனைத்து கவனமும் செலுத்தப்படுகிறது. பாதிக்கப்பட்டவருக்காக, அவரது நெருங்கிய குடும்பத்தினரைத் தவிர, யாரும் கண்ணீர் சிந்தவில்லை... நாம் ஈடுபட்டிருக்கும் பணியின் தன்மை இது தான் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆனால், அதனால் இது சரியானது என்று அர்த்தமல்ல,' என்றார்.

கிறிஸ்டா பைக்கால் கொல்லப்பட்டவர் கோலீன் ஸ்லெம்மர். புளோரிடாவைச் சேர்ந்த 19 வயதான அவர், ரோலர் ஸ்கேட்டிங் செய்வதையும், புன்னகைப்பதையும், மற்றவர்களுக்கு உதவுவதையும் விரும்பியவர் என்று அவரது நண்பர்களும் குடும்பத்தினரும் தெரிவித்துள்ளனர். வேலைப் பயிற்சி முகாமில் ஸ்லெம்மரைச் சந்தித்த பிறகு, அப்போது 18 வயதான பைக்கும் அவரது அப்போதைய காதலர் டடாரில் ஷிப்பும் அவரைச் சித்ரவதை செய்து கொலை செய்தனர்.

புதன்கிழமை டென்னஸியில் மரண தண்டனை நிறைவேற்றும் முயற்சியின் போது ஸ்லெம்மரின் தாயார் மே மார்டினெஸ் அங்கு இருந்தார். பின்னர் என்பிசி நியூஸிடம் பேசிய அவர், இந்தச் சம்பவம் `மிகவும் குழப்பமாக இருந்தது' என்று தெரிவித்தார்.

கிராசிக் வசித்து பணியாற்றும் டெக்சாஸில், நரம்பு வழியாக மருந்து செலுத்துவதற்கான ஐவ குழாய் பொருத்தப்படும் போது அதை நேரில் பார்வையாளர்கள் பார்க்க அனுமதி இல்லை. அதனால் நாங்கள் அறைக்குள் செல்லும் போது, கைதிக்கு ஏற்கெனவே ஐவ குழாய் பொருத்தப்பட்டிருக்கும் என்றார்.

# தடை செய்யப்பட்ட நினைவுகளும் தடை செய்யப்படாத நினைவுகளும்

திலீபனின் சிலையை முன்வைத்து மீண்டும் இரண்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் மோதிக் கொள்கின்றன. வழமையாக திலீபனின் நினைவு நாளுக்கு முன்பு அல்லது நினைவு நாளின் போது முரண்பாடுகள் வெடித்தெழுவதுண்டு. இந்த முறை வித்தியாசமாக நினைவு நாள் முடிந்த பின் முரண்பாடு மேற்கிளம்பியிருக்கிறது

திலீபனின் நாளை வைத்து கட்சிகள் அதிகமாக மோதிக் கொள்வதற்கு காரணம் என்ன? ஏனென்றால் திலீபன் அஹிம்சை வழியில் உயிர் துறந்தவர். அதனால் அவருடைய மரணத்தை நினைவு கூர்வதற்குச் சட்டத்தடைகள் குறைவாக இருக்கும் என்று கருதுவது ஒரு காரணம். அவர் ஆயுதப் போராட்ட மரபில் வந்தவராக இருந்தாலும் அவருடைய உயிரிழப்பு அகிம்சை வழியில் நிகழ்ந்தது. அதனால் அவரை அகிம்சை போராட்டத்தில் உயிர் துறந்தவர் என்று கூறி நினைவு கூரும்போது அதற்குச் சட்ட ரீதியாக வரக்கூடிய தடைகள் குறைவாக இருக்கலாம் என்று எதிர்பார்ப்பு.

இரண்டாவது காரணம். திலீபன் உயிரிழந்த விதம் உணர்ச்சிகரமானது. அந்த 12 நாட்களும் உணர்ச்சிப் பெருக்கானவை. எனவே ஒப்பீட்டுளவில் அதிகம் உணர்ச்சிகரமான ஒரு நினைவு கூர்தலாக அது காணப்படுகிறது. அவர் படிப்படியாக உலர்ந்து, உயிர் துறந்த நாளை நோக்கிப் படிப்படியாக உணர்ச்சிப் பெருக்குக் கட்டி எழுப்பப்படும் என்பதனாலும் அந்த நினைவு நாட்களுக்கு ஒரு விசேஷ தன்மை உண்டு.

மூன்றாவது அந்த நினைவிடம் அமைந்திருக்கும் இடம். அது யாழ்ப்பாணத்தின் சைவத் தமிழ்ப் பண்பாட்டின் இதயம் என்று வர்ணிக்கப்படுகின்ற நல்லூர் முருகன் ஆலயச் சூழலில் காணப்படுகிறது. அருகே ரியோ கிரீம் ஹவுஸ் உண்டு. இரண்டுமே வடக்கு நோக்கி வருகை தரும் சிங்கள யாத்திரிகர்களுடைய பயண வழித்தடத்தில் இணைக்கப்பட்டிருக்கும் இடங்கள். தவிர யாழ்ப்பாணத்துக்கு வரும் வெளிநாட்டவர்கள், வெளி இனத்தவர்கள் அநேகமாக அங்கே வருவார்கள். இவ்வாறாக வட பகுதி சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தின் இதயமாக ஓர் இடத்தில் திலீபனின் நினைவிடம் அமைந்திருப்பதனால் அதற்கு ஓர் இட முக்கியத்துவமும் உண்டு.

மேற்கண்ட காரணங்களினால் திலீபனின் நினைவு நாளானது ஏனைய நாட்களோடு ஒப்பிடுகையில் விசேஷமானதாகக் காணப்படுகிறது. அதனால் அந்த நினைவு நாளுக்கு தமிழ்த் தேசிய அரசியலில் உணர்வுபூர்வமான முக்கியத்துவம் உண்டு. அந்த முக்கியத்துவம் தெரிந்தபடியால் தான் அமைச்சர் சந்திரசேகரனும் மற்றொரு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் கடந்த ஆண்டு திலீபனின் இடத்துக்குப் போனார்கள்.

இந்த முக்கியத்துவம் காரணமாகத் தான் திலீபனின் நினைவு நாட்களுக்கு யார் பொறுப்பு? திலீபனின் நினைவு நாட்களை யார் நிர்வகிப்பது? திலீபனின் நினைவுக் குழுவுக்குள் யார் யார் உண்டு? திலீபனின் நினைவுச் சிலையை யார் கொண்டு போய் வைப்பது? எப்படி வைப்பது? போன்ற எல்லா விடயங்களிலும் ஒரு வித போட்டித் தன்மை நிலவுகிறது.

இந்தப் போட்டி காரணமாகத் தான் கடந்த 17 ஆண்டுகளாக திலீபனின் நினைவிடத்தை முன் வைத்து ஒவ்வொரு ஆண்டும் ஏதோ ஒரு மோதல் ஏற்படுகிறது. ஏதோ ஒரு முரண்பாடு தோன்றுகிறது. சிலசமயம் அந்த முரண்பாடுகள் ஊடகச் சந்திப்புகள் வரை போகின்றன.

ஆனால் வழமையாக நினைவு கூர்வதற்கு முன்னரோ அல்லது நினைவு கூரும் நாட்களிலோ நடக்கும் மோதல்கள் இம்முறை நினைவு கூர்ந்து முடிந்த பின் நடந்திருக்கின்றன. ஏனென்றால் வைக்கப்பட்ட சிலையை நினைவு நாள் முடியும் வரையிலும் தூக்குவதற்கு போலீஸோ அரசாங்கமோ தயாராக இருக்கவில்லை. நினைவு நாட்களின் மத்தியில் அதைத் தூக்கினால் மக்களிடமிருந்து உணர்ச்சிகரமான எதிர்ப்பு வரும்.




அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் விரும்பியிருக்கலாம்.

சிலையை வைத்த ஏற்பாட்டுக் குழுவோ அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களோ அது வெண்கலச் சிலை என்று எங்கேயும் கூறியிருக்கவில்லை. வெண்கலத்தால் அப்படி ஓர் இடுப்பளவு சிலையைச் செய்வதற்கு பல லட்சங்கள் தேவை. வெண்கலச் சிலையைச் செய்யப் போவதாகக் கூறி யாரிடமும் நிதி திரட்டப்பட்டதாக ஆதாரங்கள் இல்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிரான சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் அவை.

அதேசமயம் சிலை தூக்கப்பட்டதில் தமிழரசுக் கட்சிக்கும் பங்கு உண்டு என்பது போல ஒரு குற்றச்சாட்டு உருவாக்கப்படுகிறது. அது தமிழரசுக் கட்சியை இந்த விடயத்தில் குற்றவாளியாக்கும் நோக்கத்தைக் கொண்ட ஒரு குற்றச்சாட்டு.

தமிழரசுக் கட்சியானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் போல இந்த விடயத்தைத் தீவிரமாகவும் உணர்வு ஈடுபாட்டோடும் விசுவாசமாகவும் அணுகவில்லை என்று வேண்டுமென்றால் சொல்லலாம். ஆனால் தமிழரசுக் கட்சி தான் சிலையைத் தூக்குவித்தது என்ற பொருள்பட குற்றஞ்சாட்ட முடியாது.

இதில் யார் கூடுதலாகத் துணிச்சலாகச் செயற்பட்டிருக்கிறார்கள் அல்லது யார் சட்டத்துக்குப் பயந்து பின்வாங்கியிருக்கிறார்கள் போன்ற விடயங்களைப் பின்னர் விவாதித்துக் கொள்ளலாம். இங்கே முக்கியமாக விவாதிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், திலீபனின் சிலை ஒன்றை அங்கே வைப்பதற்கு, அதை வைத்து நினைவு கூர்வதற்கு தமிழ் மக்களுக்கு உரிமை உண்டா? இல்லையா? என்பது தான்.

இது நினைவு கூர்தலுக்கான ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உரிமையோடு அரசியல் உரிமையோடு தொடர்புடைய விடயம். தமிழ் மக்கள் தங்களுடைய கூட்டு உரிமையைக் கேட்டுப் போராடும் ஒரு சிறிய தேசிய இனம்.எனவே இந்த விடயத்தில் கூட்டு உரிமைக்கான போராட்டம் எனப்படுவது கட்சிகளைக் கடந்து வேறுபாடுகளைக் கடந்து.அக முரண்பாடுகளைக் கடந்து ஒன்று திரண்ட பெருந் திரள்போராட்டமாக அமைய வேண்டும்.ஆனால் இப்பொழுது நல்லூரில் நடந்து கொண்டிருப்பது அத்தகையது அல்ல.

அங்கே கட்சிசாரா சிவில் அமைப்புகள் மற்றும் மத குருக்கள் காணப்படுகிறார்கள். ஆனால் கட்சி சார்ந்து தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களை அங்கே காணமுடியவில்லை.

கடந்த 17 ஆண்டுகளாக திரும்பத் திரும்ப திலீபனின் நினைவு நாளிலும் திலீபனின் நினைவுச் சின்னத்தைச் சூழ்ந்தும் முரண்பாடுகளை உற்பத்தி செய்வது, அல்லது முரண்பாடுகளைப் பெருப்பிப்பது ஒரு வழமையாக மாறிவிட்டது. அது திலீபனின் மகிமையைக் குறைக்கிறது என்று இந்தக் கட்சிகளுக்குத் தோன்றவில்லையா? இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியை குற்றஞ் சாட்டுவதல்ல இங்கு முக்கியம். நினைவு கூர்தலுக்கான தமிழ் மக்களின் கூட்டு உரிமைக்கான ஒரு போராட்டத்தில் எப்படி ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு பெரும் திரளாகப் போராடுவது என்பது தான் இங்கு முக்கியம்.

17 ஆண்டுகளின் பின்னரும் தமிழ் மக்களுக்கு நினைவு கூர்வதற்கான உரிமை முழுமையாகக் கிடைக்கவில்லை.17 ஆண்டுகளின் பின்னரும் நினைவு கூர்தல் எனப்படுவது ஒரு சட்டப் பிரச்சினையாகவே தொடர்ந்து இருந்துவருகிறது. குறிப்பாக.கடந்த இரண்டு ஆண்டுகளாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும் கூட இந்த நிலைமை மாறவில்லை.இரண்டு தடவைகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜேவிபி சுதந்திரமாக நினைவு நாட்களை அனுஷ்டித்து வருகிறது. ஆனால் கடந்த 17 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பகுதி நினைவு நாட்களும் நினைவுச் சின்னங்களும் நினைவுப் பாடல்களும் நினைவுப் படங்களும் தொடர்ந்து சட்டரீதியாக நெருக்கடிக்கு உள்ளாகின்றன.

இது எதைக் காட்டுகிறது? கடந்த 17 ஆண்டுகளாக இலங்கைத்தீவில் இரண்டு வகை நினைவுகள் உண்டு என்பதைத் தான். ஒருவகை நினைவுகள் அனுஷ்டிக்கப்படக் கூடியவை. இன்னொரு வகை நினைவுகள் அனுஷ்டிக்கப்பட முடியாதவை. அல்லது வரையறைக்குட்பட்டு அனுஷ்டிக்கப்பட வேண்டியவை. 17 ஆண்டுகள் ஆகி விட்டன. ஆனால் நாட்டில் இப்பொழுதும் இரண்டு வேறு நினைவுகள் உண்டு.

யுத்தத்தில் வென்றவர்கள் தங்கள் நினைவுகளை பிரமாண்டமான சின்னங்களை நிறுவிக் கொண்டாடுகிறார்கள். கண்டி வீதி நெடுக பிரம்மாண்டமான யுத்த வெற்றி நினைவுச் சின்னங்கள் உண்டு.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்களோ தங்கள் நினைவுகளை வெளிப்படையாகவும் சிலைகளை வைத்தும் அனுஷ்டிக்க முடியாமல் இருக்கிறார்கள். இவ்வாறு இரண்டு வேறு நினைவுகளைக் கொண்ட ஒரு நாட்டில் தான் இனவாதம் இல்லை என்று அரசாங்கம் கூறிக்கொள்கிறது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆன பின்னரும், ஆட்சியில் இருப்பது யாராக இருந்தாலும், தமிழ் மக்களின் ஒரு பகுதி நினைவுகளைக் கண்டு அவர்கள் அஞ்சுகிறார்கள் என்பது தான் இலங்கைத்தீவின் இன அரசியல் யதார்த்தம் ஆகும்.

**கட்டுரையாளர்:**

**– நிலாந்தன் –**

# சினிமா எனும் கடலில் பயணத்தைத் தொடங்குகின்றேன்!



லைகா புரொடக்ஷன்ஸ் சுபாஸ்கரன் தயாரிப்பில் உருவாகியுள்ள 'சிக்மா' திரைப்படத்தின் மூலம், ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகிறார். சந்தீப் கிஷன், ஃபரியா அப்துல்லா உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்த திரைப்படம் 02 ஒக்டோபர் 2026 பல திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

படம் குறித்து ஜேசன் சஞ்சய் கூறும் போது, சிக்மா திரைப்படம் வெளியாக விருப்பது உற்சாகமாக இருந்தாலும் பதட்டமாகவும் இருக்கிறது. படத்தின் மீதான எதிர்பார்ப்புகளை நிச்சயம் பூர்த்தி செய்வோம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. 'சிக்மா' திரைப்படம் அக்டோபர் 2 ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. சக்தி ஃபிலிம் இப்படத்தை விநியோகம் செய்கிறது. ரசிகர்களை ஈர்க்கும் வகையில் உற்சாகமான மற்றும் பொழுதுபோக்கு நிறைந்த திரை அனுபவத்தை வழங்குவதற்காக ஒரு குழுவாக எங்களால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளோம்.

அறிமுக இயக்குநராக என் மீது நம்பிக்கை வைத்த லைகா புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தின் தலைவர் சுபாஸ்கரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், எங்களை முன்னின்று வழிநடத்திய லைகா புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ள தமிழ் குமரன் அவர்களுக்கும் எனது நன்றி. என் மீதும் கதை மீதும் நம்பிக்கை வைத்து அர்ப்பணிப்புடன் நடித்த சந்தீப் ப்ரோ மற்றும் ஃபரியா அப்துல்லா ஆகிய இருவருக்கும் நன்றி. நடிகர்கள் சம்பத், ராஜு மாஸ்டர் மற்றும் படக்குழுவினர் அனைவரின் ஆதரவுக்கும் நன்றி.

எந்தவொரு இயக்குநருக்கும், குறிப்பாக அறிமுக இயக்குநருக்கு அவரது சிந்தனையுடன் ஒத்துப்போகும் ஒளிப்பதிவாளர் அமைவது மிகப்பெரிய வரம். அந்த வகையில் கிருஷ்ணன் வசந்த் அவர்களுடன் பணியாற்றியதை நான் அதிர்ஷ்டமாகக் கருதுகிறேன். அவரது காட்சிப் பார்வையும் புரிதலும் சிக்மா திரைப்படத்தின் உருவாக்கத்தில் மிக முக்கியப் பங்காற்றியுள்ளன. அதேபோல், எங்கள் படத்தின் எடிட்டராக அனுபவமும் புரிதலும் கொண்ட பிரவீன் கே.எல். அமைந்ததும் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பலம். இசையமைப்பாளர் தமனின் இசையும், அதிரடியான பீட்டும் திரைப்படத்திற்கு மேலும் உற்சாகமளித்துள்ளது.

ஒட்டுமொத்த படக்குழுவினரின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் சிக்மா திரைப்படம் சாத்தியமாகியிருக்காது. குறிப்பாக, எக்ஸிகியூட்டிவ் புரொடியூசர் சுப்ரமணியன் நாராயணன் மற்றும் கிரியேட்டிவ் புரொடியூசர் சஞ்சீவ் ஆகியோரின் பங்களிப்பு முக்கியமானது. எங்களது ஆக்□ஷன் இயக்குநர்களான வெங்கட் மற்றும் சில்வா சிறப்பாக பணியாற்றியுள்ளனர். படத்தின் மையக் கதைக்களத்திற்கு மிகப்பெரிய ஆற்றலையும், சுவாரஸ்யத்தையும் சேர்த்துள்ளனர். திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சியும் அதன் தோற்றத்திற்கும் உணர்வுக்கும் ஏற்ற வகையில் மிகுந்த கவனத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சினிமா என்பது பொழுதுபோக்குக்கான ஒரு ஊடகம். அந்த வகையில், சிக்மா திரைப்படத்தை சுவாரஸ்யமான, விறுவிறுப்பான பொழுதுபோக்கு அனுபவமாக உருவாக்குவதற்கு எங்களால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளோம். பிராந்திய மற்றும் மொழி எல்லைகளைக் கடந்து, பல்வேறு பகுதிகளில் உள்ள ரசிகர்களையும் சென்றடையும் ஒரு திரைப்படத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பணியாற்றியுள்ளோம்.

ஒரு படைப்பின் மீதான நம்பிக்கை எப்போதும் பணிவுடன் இணைந்திருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையுடனும், பணிவுடனும், அக்டோபர் 2 ஆம் தேதி சிக்மா திரைப்படத்தை திரையரங்குகளில் கண்டு, எங்களுடன் இந்தப் பயணத்தை அனுபவிக்குமாறு ரசிகர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சினிமா எனும் பிரம்மாண்டமான திறமைக் கடலில், மற்றொரு அறிமுக இயக்குநராக நான் எனது பயணத்தைத் தொடங்குகிறேன். இந்தப் பயணத்தில், ரசிகர்களின் ஆதரவும் வரவேற்பும் எனக்கு எல்லாவற்றையும் விட முக்கியமானவை. 'சிக்மா' திரைப்படத்தைத் திரையரங்குகளில் பார்த்து விட்டு உங்கள் ஆதரவை கொடுங்கள் என்றார்.



இது இவ்வாறிருக்க முதலவர் விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகியுள்ள படம் 'சிக்மா'. இதில் சந்தீப் கிஷன், ஃபரியா அப்துல்லா, ராஜு சுந்தரம் உள்பட பலர் நடித்துள்ளனர். லைகா தயாரித்துள்ள இப்படம் தமிழ், தெலுங்கு மொழிகளில் வெளியானது. இந்நிலையில் இப்படத்துக்கு எதிராக, வேண்டும் என்றே எதிர்மறை விமர்சனங்கள் பரப்பப்படுவதாக நடிகர் சந்தீப் கிஷன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த சில நாட்களாக எனக்கும் என் படத்துக்கும் எதிராகத் திட்டமிட்டுப் பரப்பப்படும் எதிர்மறை பதிவுகளைப் பார்த்து வருகிறேன். இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள், யார் பணம் கொடுக்கிறார்கள் என்பது நன்றாகவே தெரியும். என்னை விட உங்களுக்குத் தான் இழப்பதற்கு அதிகம் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். விஷயம் வெளிவந்தால் அனைவரும் சிக்கிக் கொள்வீர்கள் என்று எச்சரிக்கை செய்துள்ளார்.



# திலீபனின் அரசியலும் திலீபனை வைத்து அரசியலும்

தமிழீழ விடுதலை புலிகளின் பிரதான போராட்ட வடிவம் ஆயுத வழியிலானதாக அமைந்திருந்தாலும் அரசியல் களநிலைமைகளுக்கு ஏற்பத் தேவையான வேறுவடிவங்களையும் அவர்கள் கையாள்வதற்கு பின்னின்றதில்லை. அவர்கள் ஆயுதவழியில் பல உச்சங்களைத் தொட்டது போல அகிம்சை வழியிலும் உச்சத்தைத் தொட்ட ஒரு வரலாற்று நிகழ்வே திலீபன் என்ற இராசையா பார்த்திபனின் உயிர்த் தியாகமாகும். அகிம்சைப் போராளியாக மகாத்மா காந்தியை உலகம் குறிப்பிடும். ஆனால் அந்தக் காந்தியின் தேசத்திடம் ஐந்து முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து 12 நாட்கள் ஒருதுளி நீரேனும் அருந்தாமல் அணுவணுவாகத் தனது உடலை வருத்தி உயிரைத் தன்மண்ணுக்காக அவன் ஈகம் செய்ததன் மூலம் போராளிகளின் மனவலிமையையும் இந்தியாவின் போலிமுகத்தையும் எடுத்துக் காட்டியிருந்தான். விடுதலைப்புலிப் போராளிகளில் சாகும்வரை உண்ணாநோன்பு இருந்தவன் திலீபன் என்றாலும் அதற்கான முன்னோடி தலைவர் பிரபாகரன் என்பதைப் பலர் மறந்திருக்கக்கூடும்.

பிரபாகரன் தமிழ் நாட்டில் தங்கியிருந்த காலத்தில், 1986 இல் பெங்களூரில் தென்னாசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க்(SAARC) மாநாடு நடைபெறவிருந்ததைக் காரணம் காட்டி இந்திய மத்திய அரசின் அறிவுறுத்தலுக்கமைய போராளிகளிடமிருந்த தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் சில ஆயுதங்களை தமிழ்நாடு காவல் துறை பறி முதல் செய்தது. பறிமுதல் செய்யப்பட்டவற்றைத் திரும்ப வழங்குமாறு கோரி திடீரெனச் சென்னையில் பிரபாகரன் சாகும்வரை உண்ணாநோன்பைத் தொடங்கினார்.

அவரும் நீரேதும் அருந்தாமலே அதனைத் தொடர்ந்தார். தமிழ்நாட்டு மக்களின் எழுச்சி, அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் மத்திய அரசின் மீதான அழுத்தம் என்பவற்றின் காரணமாக இரண்டு நாட்களின் பின் பறிக்கப்பட்ட சாதனங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டதால் பிரபாகரன் தனது உண்ணாநோன்பை நிறைவு செய்திருந்தார். அதன்பின்னர் இந்தியாவில் இருப்பது பாதுகாப்பற்றது என்று கருதியதால் அவர் ஈழத்திக்குத் திரும்பியிருந்தது வரலாறு.

திலீபனின் உண்ணாநோன்பும் உயிர்த் தியாகமும் அரசியல் தான். ஆனால் அது ஈழத்தமிழ் மக்களின் விடிவை நோக்கிய ஓர் அரசியல். 1987இல் மாகாணசபை முறைமையை உள்ளடக்கிய இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஈழத்தமிழ் மக்களின் சார்பான ஒரு தரப்பாக மட்டுமன்றி இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் தரப்பாகவும்கூட இந்தியா தன்னை முன்னிறுத்திக் கொண்டது. அதனால் அந்நேரத்தில் தமிழ்மக்கள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுத்தரவேண்டிய கடப்பாடு இந்தியாவுக்குரியதாக மாறியிருந்தது. அதனால் முக்கியமான ஐந்து பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இலங்கை அரசிடமிருந்து பெற்றுத் தரவேண்டுமென்ற கோரிக்கையை இந்தியாவிடம் முன்வைத்தே திலீபன் உண்ணாநோன்பைத் தொடங்கியிருந்தான்.

இதன் பின்னால் விடுதலைப் புலிகளுக்கு வேறு நோக்கங்களும் இருந்தன. குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு மாகாணசபை முறைமையின் பொருத்தப்பாடின்மை, இந்தியாவின். அனுகுமுறைகளில் ஏற்பட்ட நம்பிக்கையீனம் போன்றனவும் இந்தியாவை நோக்கிய இந்த முன்னெடுப்பை தூண்டிய காரணிகளாக இருந்தன. இவற்றின்மூலம் தங்களின் இலக்கு நோக்கிய நடத்தில் பயணிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளுதலே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது. மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும் எனத் தனது உயிர் போகும் தறுவாயில் திலீபன் கூறிய வார்த்தைகள் இதனை உறுதிப்படுத்தும். மறுபுறத்தில் இது தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடும் ஜே.ஆரின் தந்திரம் மற்றும் விடாப்பிடியும் கூட அவரவர்கள் கொண்டிருந்த வேறுபட்ட நோக்கங்களையும் அவற்றில் அவர்கள் உறுதியாக இருந்ததையும் எடுத்துக் காட்டும். இவ்வாறு இவ்விடயத்துடன் தொடர்புபட்ட மூன்றுதரப்புகளும் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலைக் கொண்டு செயற்பட்டதே திலீபனின் இறப்புக்கும் அதன் பின்னரான விளைவுகளுக்கும் காரணமாக அமைந்தது என்பதுதான் உண்மை.



இவற்றிலிருந்து திலீபனின் உண்ணாநோன்பின் பின்னாலிருந்த அரசியலை விளங்கிக் கொள்வது கடினமானதொன்றல்ல. திலீபனின் அரசியல் என்பது விடுதலைப் புலிகளின் அரசியல் தான். அது தமிழீழத் தாயகம் என்ற கொள்கையில் உறுதியாக இருத்தல். அந்த இலட்சியத்தின் பால் மக்களை ஒன்று திரட்டுதல். அதன் மூலம் போராட்டத்தை வலுப்படுத்தல். இதற்குத் தடையாக இருக்கக்கூடிய தரப்புகளின் போலி முகங்களை அம்பலப்படுத்துவதன் மூலம் ஓரங்கட்டுதல். இதற்காக எந்த எல்லைக்கும் போகத் தயாராக இருத்தல். இதன் ஒரு அங்கமாகவே மாகாணசபை முறையை நிராகரித்தலும் அமைந்திருந்தது. இந்தவகையில் திலீபனின் அரசியல் என்பது தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக விடுதலைப்புலிகள் எல்லாவகையான தியாகங்களையும் செய்வதற்கான உறுதியைக் கொண்டுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துவதன் மூலம் மக்களை எழுச்சியடைய வைத்து தமக்குப் பின்னால் அணிதிரளச் செய்வதாக இருந்தது. அது அவர்களுக்கு வெற்றியையும் தந்தது. அவர்களின் இலட்சியம் நிறைவேறாவிடினும் ஏற்றுக் கொண்ட அந்த இலட்சியத்தின் மீதான அவர்களின் உறுதிப்பாடும் அதற்கான தியாகங்களும் தான் இன்றுவரை தமிழ் மக்களின் மனதில் அவர்களை வாழ வைக்கிறது. அவை தமிழ் மக்களின் சமகாலப் போராட்டங்களுக்கு வலுச் சேர்க்கும் வரலாறாக உள்ளன.

இப்போது திலீபனும் இல்லை. விடுதலைப்புலிகளும் முன்போல களத்திலில்லை. ஆனால் திலீபனின் கோரிக்கைகளும் தமிழ் மக்களின் இலட்சியமும் அவ்வாறே உள்ளன. 40 ஆண்டுகளுக்கு முன் திலீபன் வைத்த கோரிக்கைகளுள் ஒன்றான பயங்கரவாதத் தடைச் சட்டமும் அரசியல்கைதிகளின் விடுதலையும் இன்றும் பேசுபொருளாகவே உள்ளது என்ற ஒன்றே போதும் தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத் தன்மையையும் தொடர்ந்து போராட வேண்டிய தேவைப்பாட்டையும் உணர்த்துவதற்கு. ஆனால் அதனை இன்றுள்ள அரசியல் தலைவர்கள் சரியான பாதையில் முன்கொண்டு செல்கிறார்களா என்பதே மக்கள் மத்தியில் எழுந்தவரும் கேள்வியாகும்.

திலீபன் மட்டுமல்ல எமது கடந்த காலப் போராட்ட வரலாறுகளின் ஒவ்வொரு முக்கிய நிகழ்வும் நினைவு கூரப்பட வேண்டியவையே. இது எமது உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதற்கு மட்டுமன்றி பெற்ற உரிமைகளைப் பெருமைப்படுத்துவதற்கும் அவசியமானவை. அவ்வாறாயின் அவை ஏன் நினைவு கூரப்படவேண்டும், எவ்வாறு நினைவு கூரப்படவேண்டும் என்பதில் தெளிவு அவசியம். அதுமட்டுமன்றி மாறிவரும் அரசியல் களநிலைமைகளுக்கேற்ப அந்நிகழ்வுகளின் மூலம் மக்களுக்கு எவ்வாறு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்பது தொடர்பாகவும் அறிவூர்வமாகச் சிந்திப்பது அவசியம். விடுதலைப்புலிகளின் கால அரசியல் களம் வேறு, இன்றைய அரசியல களம் வேறு. இவ்வாறான நிகழ்வுகளுக்கு தானாகச்சேரும் மக்களின் எண்ணிக்கை ஒன்றே போதும் இதனைப் புரிந்து கொள்வதற்கு.

இக்களநிலைமையை இன்றைய தமிழ் அரசியல் தலைமைகள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே இவ்வாண்டுக்கான திலீபனின் நினைவுகூரல் நிகழ்வில் தோன்றிய முரண்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாண்டு மட்டுமன்றி இதற்கு முன்னரும் திலீபனின் நினைவிடத்தில் பல முரண்பாடுகள் நடந்தேறியுள்ளன. இந்நிகழ்வில் மட்டுமல்ல மாவீரர்நாள் நிகழ்வுகளிலும், தொடக்கத்தில் முள்ளிவாய்க்கால் முற்ற நிகழ்வுகளிலும் இவ்வாறான பல முரண்பாடுகளையும் அதையொட்டிய சர்ச்சைகளையும் பார்க்கமுடிந்தது. இந்நிலைமை தோன்றுவதற்கான காரணங்கள் பல. ஒன்று திலீபனின் தியாகத்துக்கான நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமை. மற்றது இதுபோன்ற நிகழ்வுகள் மக்களுக்கானவை என்பது மறைந்து அரசியல் கட்சிகளுக்கானவை என சுருங்கிவிட்டமை. அடுத்தது மாறிவரும் அரசியல் களநிலைமைகளைத் தமிழ்த் தலைவர்கள் சரியாக மதிப்பிடத் தவறுகின்றமை.

திலீபனின் நோக்கம் தன்னாட்சிக்கான போராட்டத்தில் மக்களை ஒன்று திரட்டுவதென்றால் அவனை நினைவு கூரும் நிகழ்வின் நோக்கமும் அதுவாகத்தானே இருக்கமுடியும். அவ்வாறாயின் கட்சிகளாகவும் குழுக்களாகவும் பிரிந்துநின்று ஏன் மல்லுக் கட்டவேண்டும்? திலீபனை நினைவு கூர நாங்கள் தான் தகுதியானவர்கள், மற்றவர்களுக்கு அந்தத்தகுதி இல்லை என்று எண்ணுவதும், திலீபனின் நினைவிடம் எங்கள் ஆளுகை எல்லைக்குள் இருப்பதால் நாங்கள் சொல்வதுதான் சட்டம் என அதில் அதிகாரம் செலுத்துவதும் திலீபன் விரும்பியதுக்கு எதிர்மாறான விளைவுகளையல்லவா ஏற்படுத்தி வருகிறது. இவை மக்களை ஒன்று திரட்டுவதற்குப் பதிலாக அவர்களிடையே பிரிவினைகளையும் வெறுப்பையுமல்லவா தோன்றுவித்து வருகிறது. மக்களுக்கான இந்நிகழ்வுகள் அரசியல் கட்சிகள் சார்ந்ததாக அரசியல் பணிமனைக்குள் ஏன் சுருக்கப்படுகின்றன? நிகழ்வை ஒரு கட்சி ஏற்பாடு செய்வதும் அதற்கு இன்னொரு கட்சி முட்டுக்கட்டை போடுவதும் இவ்வாறான நிகழ்வுகள் கட்சி நலன் சார்ந்து சிந்திக்கும் நிலைக்குக் கீழிறங்கி விட்டது என்பதைத் தானே புலப்படுத்துகிறது. திலீபனுக்காக மல்லும் கட்டுபவர்களில் ஒருவர்கூட திலீபனைப் போல தியாகம் செய்வதற்கு தயாராகவில்லை

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
-க. அருந்தவபாலன் -



அரசியல் கட்சிகளின் தலைவர்களின் இவ்வாறான அணுகுமுறைகள் தமிழ் மக்களின் தன்னாட்சிக்காக மக்களை ஒன்று திரட்டுவதற்குப் பதிலாகத் தங்கள் தங்கள் கட்சிகளுக்கு ஆட்களைப் பிடிப்பதற்கானவை என மக்கள் எண்ணுவதில் என்ன தவறு இருக்க முடியும்? விடுதலைப்புலிகளின் போராட்டமும் தியாகங்களும் மக்களுக்கானவையே அன்றிக் கட்சிகளுக்கானவை அல்லவே. தன்னாட்சி அதிகாரத்தை நோக்கியவையே அன்றி தனிப்பட்டவர்களின் பதவிகளை நோக்கியவையல்ல. அத்தகைய தியாகங்களை நினைவுகூரும் நிகழ்வுகளிலேனும் ஒன்று பட முடியாத தமிழ்த் தலைவர்களால் தமது மக்களை எவ்வாறு ஒன்றுபடுத்த முடியும்? தம்மைப் போலவே மக்களையும் கூறு போடத்தானே அவர்களால் முடியும். அவ்வாறு தங்கள் தங்கள் சுயநல அரசியல் தேவைகளுக்காக தமிழ்மக்களைக் கூறுபோட்டதன் விளைவைத்தானே இன்றைய தமிழர் அரசியல் களம் அறுவடை செய்கிறது. மக்கள் தமிழ் அரசியலையும் அதனை முன்னெடுக்கும் தலைவர்களையும் விட்டு தூரவிலகிச் செல்வதானே நாளாந்தம் நடைபெறுகிறது. இவை எதனையும் உள்வாங்காது இன்னும் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதன் மூலம் எந்த முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை.

தமிழ் மக்களுக்கான அரசியலை முன்னெடுப்பதற்கு இவ்வாறான நிகழ்வுகளிலேனும் தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றுபடவேண்டும். அத்துடன் அவற்றின் ஏற்பாட்டு முறைகளும் உத்திகளும்கூட மாற்றப்படவேண்டும். வழமையான முறைகளாலும் அவற்றில் வழமையாகக் கூடும் தலைகளாலும் ஒரு அடியேனும் முன்னகர்த்த முடியாது. இத்தகைய பொதுநிகழ்வுகளை நடத்துவதற்கு குறித்தவொரு அரசியல்கட்சி என்றில்லாது கட்சிகளின் உறுப்பினர்களையும் உள்வாங்கி சமூக மட்டத் தலைவர்கள் மற்றும் செயற்பாடாளர்களைக் கொண்ட பொதுவான ஏற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்படுவதே பொருத்தமானதாக இருக்கும்.

(18ம் பக்கம் பார்க்க)

# தடை செய்யப்பட்ட ஓமான் விமானி எவ்வாறு இஸ்ரேல் செல்லும் விமானத்தில் பணியாற்றினார்?

ஃப்ளைதுபாய் விமான நிறுவனத்தில் பணியாற்றியதாகக் கூறப்படும் அல் ஹமாமி என்ற ஓமன் நாட்டைச் சேர்ந்த விமானி, தீவிரவாதக் கருத்துகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகங்கள் மற்றும் அவரது பின்னணி தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஓமனில் இருந்து வெளியேறிய பின்னர், ஐக்கிய அரபு அமீரகத்திற்குச் செல்வதற்கு முன்னர் ஹமாமி தனது பெரும்பாலான காலத்தை சிரியாவில் கழித்ததாகவும், அங்கு அவர் தீவிரவாதக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது தீவிரவாதக் கருத்துக்கள் தொடர்பாக கவலைகள் எழுந்ததைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு ஓமனின் தேசிய விமான நிறுவனமான ஓமன் ஏரில் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பயிற்சிப் பொறுப்பிலிருந்து அவர் நீக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாமி ஓமன் நாட்டைச் சேர்ந்தவர் எனவும், ஓமனைச் சேர்ந்த தந்தைக்கும் சிரியாவைச் சேர்ந்த தாய்க்கும் மகனாகப் பிறந்தவர் எனவும் கூறப்படுகிறது. மேலும், அவரது வாழ்க்கையின் பல ஆண்டுகளை ஐக்கிய அரபு அமீரகத்தில் கழித்துள்ளதாகவும்



செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும், அவரிடம் ஐக்கிய அரபு அமீரக குடியுரிமை இல்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஃப்ளைதுபாய் நிறுவனத்தில் அவர் சுமார் எட்டு மாதங்கள் மட்டுமே பணியாற்றியதாகவும், இதற்கு முன்னர் மொராக்கோவின் தேசிய விமான நிறுவனமான ரோயல் ஏர் மரோக் நிறுவனத்தில் பணியாற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவின் தபுக் விமான நிலையத்தில் ஹமாமி கைது செய்யப்பட்டதாகவும், பின்னர் அவர் சவுதி அரேபியாவிலிருந்து ஐக்கிய அரபு அமீரகத்திற்கு மாற்றப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர் எவ்வாறு விமானக் குழுவில் இடம் பெற்றார் என்பது தொடர்பாக ஷின் பெட், மொசாட், இராணுவம் மற்றும் போக்குவரத்து அமைச்சு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஹமாமியிடம் இருந்த உடமைகளில் சுதந்திர பாலஸ்தீனம் எனும் கருத்தை ஆதரிக்கும் குழுக்களின் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் வெளியீடுகள் உள்ளிட்ட பாலஸ்தீன ஆதரவு பொருட்கள் காணப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், அவர் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவையும் இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாட்டையும் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது.

அவரது நடவடிக்கைகள் மற்றும் அவருக்கு இருந்ததாகக் கூறப்படும் தீவிரவாத நோக்கங்கள் தொடர்பில் அதிகாரிகள் விரிவான விசாரணையை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.ஓமன் இஸ்ரேலை அங்கீகரிக்கவில்லை என்பதுடன், அந்நாட்டுடன் தூதரக உறவுகளையும் கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் ஓமன் நாட்டைச் சேர்ந்த ஹமாமி, டெல் அவிவ் நோக்கிப் பயணிக்கும் விமானத்தில் பணியாற்றுவதற்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது என்பது குறித்தும் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவரது ஆரம்பகால பணிகள், பயண வரலாறு, தொடர்புகள் மற்றும் விமானக் குழுவில் பணியாற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்ட விதம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கணவர் கத்தியால் குத்தப்பட்டதை அறிந்து நிலை குலைந்தேன்!

## இந்திய விமானியின் மனைவி உருக்கம்!





பிளைதுபாய் விமானத்தில் துணை விமானியால் கத்தியால் குத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இந்திய விமானி ஸ்மித் மச்சார், அபுதாபியில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் குறித்து அறிந்த அவரது மனைவி சோனல் மச்சார், மும்பையிலிருந்து அபுதாபிக்குச் சென்று கணவரை சந்தித்துள்ளார். கணவர் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் குறித்து அறிந்தபோது தாம் எவ்வாறு உணர்ந்ததாக செய்தியாளர்கள் கேட்டபோது, தாம் மிகவும் நிலைகுலைந்து போனதாக சோனல் மச்சார் தெரிவித்துள்ளார்.

நான் மிகவும் நிலை குலைந்து போனேன். எப்படி எதிர்வினையாற்றுவது என்பதை அறியும் மனநிலையில் நான் இருக்கவில்லை. ஆனால், எனது நண்பர்களும் குடும்பத்தினரும் என்னைச் சுற்றி இருந்ததால், எல்லாம் சரியாகிவிடும் என்ற நம்பிக்கையை அவர்கள் எனக்கு அளித்தனர். மிக விரைவிலேயே அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும் எனக்கு தகவல்கள் வரத் தொடங்கின என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கணவரை சந்தித்ததாகவும், அவர் உரிய மருத்துவக் கண்காணிப்பில் இருப்பது தமக்கு நம்பிக்கையை அளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

நான் அவரை சந்தித்தேன். அவர் சிறந்த மருத்துவக் கவனிப்பில் இருப்பது எனக்கு நம்பிக்கையளித்தது. அமீரக வைத்தியர்கள் மற்றும் இராணுவ வைத்தியர்களின் சிறந்த பராமரிப்பில் அவர் உள்ளார் என சோனல் மச்சார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிளைதுபாய் விமானத்தில் இடம் பெற்ற தாகத் தெரிவிக்கப்படும் கத்திக்குத்து சம்பவத்தைத் தொடர்ந்து, இந்திய விமானி ஸ்மித் மச்சார் அபுதாபியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

நடுவானில் துணை விமானி தாக்கியதால் படுகாயம் அடைந்த இந்திய வம்சாவளி விமானி ஸ்மித் மச்சார் நன்கு குணமடைந்து வருவதாக ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை நோக்கி புதன்கிழமை (செப்.30) காலை 180 பயணிகளுடன் 'ஃபிளை துபாய்' விமானம் புறப்பட்டது. இதில் 174 பயணிகளும், பைலட்டுகள் 2 பேர் உட்பட 6 ஊழியர்களும் பயணம் செய்தனர். இந்திய வம்சாவளி பைலட் ஸ்மித் மச்சார் (39) விமானத்தை இயக்கினார். ஓமன் நாட்டை சேர்ந்த துணை பைலட் உடன் இருந்தார். திடீரென பைலட் அறையில் இருந்த கோடரியால் ஸ்மித் மச்சாரைத் துணை பைலட் தாக்கினார். இதில் நிலைகுலைந்த மச்சார், துணை பைலட்டை தீரத்துடன் எதிர்த்துப் போராடினார். சரியான நேரத்தில் பைலட் அறையை திறந்து சக பயணிகளின் துணையுடன் விமானத்தை பாதுகாப்பாக தரையிறக்கவும், பயணிகளின் உயிர் காக்கவும் உதவினார். இந்நிலையில், அவருக்கு பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நேதன்யாகு உட்பட உலக தலைவர்கள் தங்களது பாராட்டினை தெரிவித்தனர்.

## இஸ்ரேல் செல்லும் விமானங்களை இயக்கிய 12 ஓமன் பைலட்டுகள்?

இஸ்ரேல் செல்லும் பயணிகள் விமானங்களை குறிவைத்து பலமுறை தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு இஸ்ரேல் விமான நிறுவனங்கள் பல்வேறு பாதுகாப்பு நடைமுறைகளை கண்டிப்புடன் பின்பற்றுகின்றன. இஸ்ரேலின் பயணிகள் விமானங்களில் காக்பிட் (விமானிகள் அறை) கதவுகள் மிகவும் வலுவாக வடிவமைக்கப்பட்டு உள்ளன. பொதுவாக பயணிகள் விமானத்தில் ஒரு காக்பிட் கதவு மட்டுமே இருக்கும். ஆனால் இஸ்ரேல் விமானங்களில் இரு காக்பிட் கதவுகள் பொருத்தப்பட்டு உள்ளன. மேலும் அனைத்து பயணிகள் விமானங்களிலும் ஏவுகணை தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டு உள்ளன.

இதன் மூலம் நடுவானில் விமானங்களை குறிவைத்து நடத்தப்படும் ஏவுகணை தாக்குதல்களை தடுக்க முடியும். ஒவ்வொரு விமானத்திலும் சாதாரண உடையில் பாதுகாப்புப் படை வீரர்களும் பயணம் செய்கின்றனர். இஸ்ரேல் நகரங்களுக்கு விமானங்களை இயக்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் அந்த நாட்டு அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து உள்ளது.

குறிப்பாக இஸ் ரேலுடன் தூதரக உறவை வைத்திருக்கும் நாடுகளின் பைலட்களை மட்டுமே பணியில் அமர்த்த வேண்டும். பைலட்டின் பின்னணி குறித்து முழுமையாக விசாரிக்க வேண்டும் என்று கண்டிப்புடன் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

ஆனால் 'ஃபிளை துபாய்' உள்ளிட்ட வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த அறிவுரையை முறையாகப் பின்பற்றவில்லை என்று கூறப்படுகிறது. இஸ்ரேலுக்கும் ஓமன் நாட்டுக்கும் இடையே தூதரக உறவு கிடையாது. இதன்படி ஓமன் நாட்டு பைலட்கள் இஸ்ரேல் செல்லும் விமானங்களை இயக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளில் மட்டும் சுமார் 12 க்கும் மேற்பட்ட ஓமன் பைலட்கள் இஸ்ரேல் நகரங்களுக்கு விமானங்களை இயக்கி உள்ளனர் என்று இஸ்ரேல் ஊடகங்கள் குற்றம் சாட்டி உள்ளன.

# காவி உடையை உயிராகக் கொண்டே நாங்கள் நாட்டைப் பாதுகாத்தோம்!
# நீதிமன்ற வளாகத்தில் ஞானசாரருக்கு ஆதரவாக ஒன்றுகூடிய தேரர்கள்!



பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரது காவி உடையை அகற்றி சிறைச்சாலை உடையை அணிவித்து நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக மகா சங்கத்தினரும், பொதுமக்களும் இணைந்து போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஞானசார தேரர் இஸ்லாம் மதத்தை அவமதித்ததாக குற்றம் நிரூபிக்கப்பட்ட வழக்கில் ஒன்பது மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக 06 ஒக்டோபர் 2026 அவர் மீண்டும் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டபோதே மகா சங்கத்தினர் இவ்வாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஞானசார தேரரின் காவி உடையை அகற்றியமை தொடர்பில் மகாவிகாரை வம்சத்துக்குரிய ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமக்ரிதர்ம மகாசங்கசபையும் ஏற்கனவே சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் எழுத்துமூலம் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது காவி உடையை அகற்றுவது தொடர்பான சாசன நடவடிக்கையை மேற்கொள்ளும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மகா சங்க சபைக்கே இருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், உலப்பனே ஸ்ரீசுமங்கல தேரர், ஸ்ரீ சமந்தபத்ர தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் கொழும்பு நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக ஒன்றுகூடினர். காவி உடையை உயிராகக் கொண்டு நாட்டைப் பாதுகாத்தோம்.தேசப்பற்று மிக்கவர்களின் நிலைமை இதுவா உள்ளிட்ட கோசங்களை எழுப்பியும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும் அவர்கள், தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அண்மையில் கைது செய்யப்பட்ட செவ்வந்திக்கு கைவிலங்கு இடவில்லை. ஆனால் ஞானசார தேரருக்கு மாத்திரம் கைவிலங்கிட்டு கேவலப்படுத்துகின்றனர். இந்த அரசாங்கத்தின் நீதி எங்கே? என்றும் கேள்விகளை எழுப்பி விசனம் வெளியிட்டனர்.

இதனிடையே, மகாவிகாரை வம்சத்துக்குரிய ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ஸ்ரீகல்யாணி சாமக்ரிதர்ம மகா சங்க சபையின் அனுநாயக்க தேரர் அக்கேமஹ பண்டித பேராசிரியர் கொட்டபிட்டியே ராகுல அனுநாயக்க தேரர் தலைமையிலான குழுவினரும் பிரதான நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்னால் நடைபெற்ற அமைதி வழிப்போராட்டத்தில் பங்கேற்றனர். அத்துடன் ஞானசார தேரருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் நீதிமன்ற வளாகத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் ஞானசாரதேரர் நீதிமன்றத்துக்குள் சிறைக்காவலர்கள் பாதுகாப்பாக அழைத்துச் சென்ற போது அவருடன் நீதிமன்றத்துக்குள் செல்ல முயன்ற தேரர்களுக்கு பொலிஸார் அனுமதி மறுத்ததால் இருதரப்பினரிடையேயும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

அனுமதியின்றி நீதிமன்ற வளாகத்துக்குள் மகா சங்கத்தினருக்கு செல்ல முடியாது என்று பொலிஸார் தெரிவித்தமையால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த தேரர்கள், எமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி தொடர்பாக நீதிபதியைச் சந்தித்து ஆலோசனை பெற வேண்டும் என்று வாதம் செய்தனர். இறுதியில் பொலிஸார் தேரர்களை நீதிமன்ற வளாகத்துக்குச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது என்பதை உறுதியாகக் கூறவும், அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் ஞானசார தேரரை மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது, அவரைச் சுற்றி வளைத்த மகா சங்கத்தைச் சேர்ந்த தேரர்களும் ஆதரவாளர்களும் காவி உடையை அணியுங்கள் என்று கூறி கோசங்களை எழுப்பினர்கள். எனினும் அவர்களை ஞானசார தேருக்கு அருகில் செல்வதை தடுத்து நிறுத்திய சிறைக்காவல் அதிகாரிகள் அவரை சிறைச்சாலை வாகனத்துக்குள் கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் ஏற்றினார்கள்.

அதன்போது, `சாது, சாது' என்றவாறு கோஷங்களை எழுப்பிய மகா சங்கத்தினர் ஆசீர்வாதப் பாராயணங்களை ஓதியதோடு ஞானசார தேரருக்கும் ஆசீர்வாதம் வழங்கியதுடன் இதுவே இலங்கையில் முதலும் இறுதியுமாக காவி உடையை அகற்றும் நடவடிக்கை என்றும் குளுரைத்தனர். அத்துடன் சில தேரர்கள் சிறைச்சாலை வாகனத்தின் முன்வாயிலை அடைத்து காவி உடையை அவருக்கு வழங்க முற்பட்டனர். அத்துடன் மேலும் சில ஆதரவாளர்கள் சிறைச்சாலை வாகனத்தை முன்நகர்த்துவதை தடுத்து நிறுத்தும் வகையில் நின்றிருந்தனர்.

இந்நிலையில் பொலிஸார் தலையிட்டு சிறைச்சாலை வாகனத்தைச் சூழ ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அகற்றியதோடு பின்னர் ஞானசார தேரரை ஏற்றிய சிறைச்சாலை வாகனத்தை முன்னகர்த்துமாறு பணித்தனர். அதன் போது பொலிஸாரின் தடைகளை மீறி ஞான சாரதேரருக்கான காவி உடை முன்வாயிலால் வழங்கப்பட முனைந்த நிலையில் சிறைச்சாலை வாகனம் புறப்பட்டுச் சென்றது.

இதன்போது ஞானசார தேரரின் காவி உடையை அவருக்கு அணிவியுங்கள் என்று ஆதரவாளர்கள் கோஷங்களை எழுப்பினர். பலர் கண்ணீர் மல்க தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இந்நிலையில், ஸ்ரீசமந்தபத்ர தேரர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

கிறிந்தவ கடவுள், இந்து சமயம், பகவத்கீதை உள்ளிட்ட எந்த மதம் தொடர்பாக வேண்டுமானாலும் என்னிடம் கேளுங்கள். நான் 25 ஆண்டுகளாக தேங்காய் துருவியதில்லை. புரிகிறதா? சிலரை மகிழ்விப்பதற்காகவே இந்த விளையாட்டு நடத்தப்பட்டுள்ளது. நான் புத்தராகி விட்டேனா என்பதை உங்களுக்கு புரிய வைக்க நீங்கள் புத்தராகவில்லை. எமது ஞானசார தேரருக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அறிந்தோம். நாங்கள் அன்றிலிருந்து அவருடன் நட்பாகப் பழகிய ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அவருக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்த போது கவலையடைந்தோம். உண்மையில் இது ஒரு புதிய விடயம் அல்ல. பழைய பிரச்சினையின் தொடர்ச்சியாகவே இதனை நான் பார்க்கிறேன். முன்னரும் இதே பிரச்சினை காரணமாக அவர் சிறையில் இருந்தார். அப்போதும் இதே முறையில் விடயம் கையாளப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டால் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படும். எனவே, முன்னர் இருந்த முறையிலேயே இதனை அமைதியாகத் தீர்த்துக் கொண்டால் சிறந்தது என்றார்.

இதேவேளை உலப்பனே சுமங்கல தேரர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கையில், அரசாங்கத்திடம் நாம் ஒன்றைக் கூறுகிறோம். இந்த சாசனம் 2,500 ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. இதைவிட பாரிய அழிவுகளையும் சவால்களையும் எதிர்கொண்டு ஆயிரக்கணக்கான மகா சங்கத்தினர் தமது உயிர்களை அர்ப்பணித்துள்ளனர். எனவே ஞானசார தேரரை சிறையில் அடைத்து, அவரது காவி உடையை அகற்றி, சாசனத்துக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி, சாசனத்தின் எதிர்காலப் பயணத்தைத் தடுத்து, இந்த நாட்டில் மதச்சார்பின்மையையோ மதப் பிரிவினையையோ பரப்ப முடியும் என அரசாங்கம் நினைத்தால், அது ஒரு கேலிக்கூத்தாகும்.

சிறைச்சாலை ஆணையாளருக்கும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளருக்கும் இந்த நாட்டின் மக்களின் பணத்தில் சம்பளம் பெறுகின்றவர்கள். எனவே, ஒரு அரசியல் அமைப்பின் பேச்சாளர்களாகச் செயற்படாதீர்கள். பொறுப்புடன் செயற்படும் அரச ஊழியர்களாக உங்கள் கடமையைச் செய்யுங்கள். ஞானசார தேரர் பல தடவைகள் சிறையில் இருந்துள்ளார். அந்த சந்தர்ப்பங்களில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலாவது அவர் காவி உடையின்றி சிறைச்சாலை உடையை அணிந்திருந்தார் என்பதை நிரூபிக்குமாறு நான் சவால் விடுக்கிறேன். அவ்வாறு நடந்தது என்பதை நிரூபிக்க முடிந்தால் நிரூபியுங்கள். அது ஒரு போதும் நடந்ததில்லை. இதனை நான் தனிப்பட்ட முறையிலும் கூறுகிறேன் என்றார்.



இதேவேளை கலகொட அத்தே ஞானசார தேரரின் காவி உடையை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மகாநாயக்க தேரர்களால் பிராந்திய ரீதியாக நீதித்துறை சார்ந்த பௌத்த விவகாரங்களை நிர்வகிக்கவும் கவனிப்பதற்கும் பொறுப்பாக இருந்த முன்னாள் உடுதும்பர பிரதம நீதித்துறை சங்கநாயக்க போப்பிட்டியே சுமங்கல தேரர் 07 ஒக்டோபர் 2026 உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.



இது இவ்வாறிருக்க தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் ஜனநாயக முகமூடியை அணிந்து வந்ததைப் போன்றே, மக்கள் விடுதலை முன்னணியினரும் ஜனநாயக முகமூடியை அணிந்து ஆட்சி அதிகாரத்துக்கு வந்து, நாட்டுக்கும் இனத்துக்கும் சம்புத்த சாசனத்துக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர் என பெங்கமுவே நாலக தேரர் குற்றம் சாட்டினார்.

ஞானசார தேரரின் கைது மற்றும் அவரின் காவி உடை அகற்றப்பட்டமை தொடர்பில் 07 ஒக் 2026 புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஞானசார தேரரை கைது செய்து நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றுள்ள விடயம் பாம்பை அடிக்கச் சென்று குறி தப்பியதாக நினைத்துக 'கொள்ள வேண்டிய நிலையை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியுள்ளது. பிக்குவை அவமதிப்பது புத்த சாசனத்தை அவமதிப்பதாகும். இதனால் அரசாங்கத்துக்கு பாரிய பாதிப்பு ஏற்படக்கூடும் எனவும் எச்சரித்துள்ளார்.




# ரஜனியின் பக்கபலத்துடன் அரசியலில் களம் இறங்கும் தனுஷ்



அரசியல் களம் காண உள்ள நடிகர் தனுஷ், முதல்வர் விஜய் போலவே நேரடியாக 2031 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளார்.

தமிழகத்தில் நடந்த முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் மிகப்பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது. தமிழக வெற்றிக் கழகம் (தவெக) என்ற அரசியல் கட்சியை தொடங்கிய விஜய் 2 ஆண்டுகளில் ஆட்சியை பிடித்துள்ளார். இந்த அரசியல் மாற்றதால், தமிழக அரசியலில் பல ஆண்டுகளாக மாறி, மாறி கோலோச்சிய திமுக, அதிமுகவின் செல்வாக்கு குறைந்துள்ளது.

எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கி ஆட்சியை பிடித்த பிறகு, நடிகர்கள் சிவாஜி கணேசன், பாக்கியராஜ், டி. ராஜேந்தர் உள்ளிட்டோர் அரசியல் கட்சியை தொடங்கினர். ஆனால், அவர்களால் எம்ஜிஆரை போல் அரசியலில் வெற்றி பெற முடியவில்லை.

அதேநேரத்தில், விஜய் தவெகவை தொடங்கி 2 ஆண்டுகளில் ஆட்சியை பிடித்து முதல்வராகி விட்டதால், மற்ற நடிகர்களும் அரசியலில் களம் இறங்க தயாராகி வருகின்றனர். இதில் நடிகர் தனுஷ் புதிய இயக்கம் தொடங்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதற்காக பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார். நடிகர் தனுஷை தொடர்ந்து சூர்யா, சிவகார்த்திகேயன் ஆகியோர் தங்களுடைய ரசிகர்கள் சந்திப்பை நடத்தியுள்ளனர். மற்ற நடிகர்களை விட, தீவிர அரசியலில் ஈடுபட முடிவு செய்துள்ள தனுஷ், அதற்கான அனைத்து பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

இதற்கிடையில் தமிழக எழுச்சிக் கழகம் என்ற பெயரிலான கட்சியை தேர்தல் ஆணையத்தில் தனுஷ் தரப்பு பதிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது. இது பற்றி தனுஷ் தரப்பில் கேட்ட போது, அரசியல் கட்சி தொடங்கப் போவது உறுதி. ஆனால், இன்னும் கட்சி பெயர் எல்லாம் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யவில்லை. அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும். அதுவரை ரசிகர்கள் பொருமையாக காத்திருக்க வேண்டும் என்றனர்.

தனுஷ் கட்சி தொடங்குவது தொடர்பாக சினிமா வட்டாரத்தில் கேட்ட போது, அவர்கள் கூறியதாவது: நடிகர் ரஜினிகாந்த் கட்சி தொடங்கியிருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருப்பார். ஆனால், உடல்நிலை சரியில்லாத காரணத்தால், அவர் கட்சி தொடங்குவதில் இருந்து பின்வாங்கினார். ஆனால், விஜய் கட்சி தொடங்கி அனைத்து எதிர்ப்புகளையும், இரு பெரும் கட்சிகளான திமுக – அதிமுகவையும் சமாளித்து, ஏன் கரூர் சம்பவத்தில் இருந்தும் மீண்டெழுந்து மாபெரும் வெற்றி பெற்று அரசியல் களத்தையே மாற்றியுள்ளார்.

விஜய்யின் அபார வெற்றியை பார்த்த, ரஜினி தரப்பினர் மற்றும் அவரது ரசிகர்கள் நல்வாய்ப்பை தவற விட்டு விட்டோமே என்று ஆதங்கத்தில் உள்ளனர். அந்த ஆதங்கத்தை போக்கும் விதமாகவே, ரஜினியின் மருமகனாக இருந்த நடிகர் தனுஷ் அரசியல் களம் காண உள்ளார்.

ரஜினியின் பக்க பலத்தோடு தீவிர அரசியலில் ஈடுபடவுள்ள தனுஷ், விஜய் போலவே கட்சி தொடங்கி, வரும் உள்ளாட்சி தேர்தல், மக்களவை தேர்தலில் போட்டியிடாமல் நேரடியாக 2031ல் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளார்.

விஜய் அரசியல் கட்சி தொடங்கிய பிறகு ரஜினிக்கும், விஜய்க்கும் இடையிலான சினிமா போட்டி என்பது ஒரு விதமான மோதல் போக்கு போல் மாறியது. இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் சமூக வலை தளங்களில் தொடர்ந்து விமர்சனம் செய்ய தொடங்கினர். தேர்தலில் விஜய் வெற்றி பெற்ற உடனே, திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை, ரஜினி நேரில் சந்தித்து பேசியது விமர்சனத்துக்குள்ளனது. இதனை தொடர்ந்து, அந்த சந்திப்பு குறித்து ரஜினி விளக்கம் அளித்தார். ஆனாலும், இருதரப்பினர் இடையே சமூக வலைதளங்களில் மோதல் போக்கு தொடர்ந்து இருந்து கொண்டே தான் இருக்கிறது.

சட்டப்பேரவை தேர்தல் வெற்றிக்கு பிறகு முதல்வர் விஜய்யை, அவரது இல்லத்திலும், தலைமைச் செயலகத்திலும் கமல்ஹாசன், சிவகார்த்திகேயன், சிலம்பரசன் உள்ளிட்ட பல்வேறு சினிமா பிரபலங்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். ஆனால், இதுவரை ரஜினி, தனுஷ் ஆகியோர் விஜய்யை சந்திக்கவில்லை. ஏற்கனவே சினிமா மற்றும் அரசியலில் விஜய்யுடன் உள்ள மோதல் போக்கு, தற்போது புதிதாக அரசியல் கட்சி தொடக்கம் போன்றவைகளால் இருவரும் முதல்வர் விஜய்யை நேரில் சந்திப்பதை தவிர்த்து இருக்கலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## ஞானசாரருக்கு உதவிய வங்கி அதிகாரிக்கு மறியல்

மூன்று நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்குத் தலைமறைவாக இருக்க உதவி புரிந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட வங்கி உத்தியோகத்தர் ஒருவரை இன்று 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் அஸங்க எஸ். போதரகம உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட களணியைச் சேர்ந்த தமித் அஞ்சன வனிசேகர என்ற சந்தேகநபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நீதிமன்றத்தில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், குற்றவாளியான தேரருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்திருந்தும், சந்தேகநபர் தனது மோட்டார் காரில் ராஜகிரியவிலிருந்து அளுத்கம அல்லது எல்பிட்டிய பகுதிக்குத் தேரரை ஏற்றி சென்றுள்ளதாகத் தெரிவித்தனர் நாட்டில் நிலவும் தற்போதைய சட்டத்திற்கு மதிப்பளிக்காமலும், நீதிமன்ற உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியாமலும், தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் குற்றங்களைப் புரிந்தமை தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்பதால் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.